பக்கங்கள்-16 | பங்குனி 16,2014 | விலை-30.00

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

தினப்புயல்

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

மலர்-01 | Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com | இதழ் - 76

**விளம்பரங்கள்**

அனைத்துவகையான விளம்பரங்களையும் பிரசுரிக்க நாடுங்கள்...

தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை.
வவுனியா.

**அன்பான வாசக நெஞ்சங்களே**

எமது தினப்புயல் பத்திரிகை தொடர்பான அனைத்து விமர்சனங்களையும், ஆக்கங்களையும் வரவேற்கின்றோம்.

## ஜெனிவாவில் பிரபாகரனை ஆதரித்து பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டம்



## விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றினை வவுனியாவில் CRC அமைப்பு காட்சிப்படுத்தியது

## பாராளுமன்ற தெரிவுக்குழு எனக் கூறி அரசு ஏமாற்றுகிறது - சுரேஷ் பிரேமச்சந்திரன்

தென்றல் அச்சகம்

THENDRAL PRINTERS

154A, 6ம் ஒழுங்கை, தேக்கவத்தை, வவுனியா. Tel: 0755147928

# விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றினை வவுனியாவில் CRC அமைப்பு காட்சிப்படுத்தியது

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான போராட்ட வரலாற்று காலங்களை பார்க்கின்றபொழுது, 01 ஆம் கட்ட ஈழப்போரானது 1983 – 1989 வரையும், 02 ஆம் கட்ட ஈழப்போரானது 1992 – 1994 வரையும், 03 ஆம் கட்ட ஈழப்போரானது 1995–2002 வரையும், 04 ஆம் கட்ட ஈழப்போர் 2003 – 2009 வரையான காலப்பகுதியாகும்.



இவ்வாறு விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறு முன்னேறிக்கொண்டே வந்தது. இவ்வாறிருக்கும் காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் கடல், வான், தரை என முப்படைகளிலும் சிறந்து விளங்கினர்.

இதன் விளைவாக உலக நாடுகளின் கவன ஈர்ப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது திசைதிருப்பப்பட்டது. பயங்கரவாத ஒழிப்பு என்ற தோரணையில் தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவீழ்த்து விடப்பட்டன. இன அடக்குமுறைக்கு எதிராக ஆயுதக்குழுக்கள் உருவெடுத்தன. LTTE (Liberation of Tamil Eelam) என பிரபாகரன் தலைமையிலும், EPRLF (Eelam People's Revolutionary Liberation Front) இதன் தலைவர் K.பத்மநாபாவும், PLOT (Peoples Liberation Organization of Tamil Eelam) இதன் தலைவராக உமா மகேஸ்வரனும், TELO (Tamil Ealam Liberation Organization) இதன் தலைவராக சிறி சபாரத்தினமும், போன்றோர்களின் தலைமையில் இலங்கை அரசிற்கு எதிராக ஆயுதப்போராட்டம் இடம்பெற்றது.

இக்காலகட்டத்தின் போது A.அமிர்தலிங்கம், துரையப்பா, உமா மகேஸ்வரன், பத்மநாபா, சிறி சபாரத்தினம், விடுதலைப்புலிகளுக்கு இடையில் யார் தலைவர் என்ற நிலைமை உருவாக, தமிழ்த்தலைவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழீழம் தான் ஒரே இலக்கு என்ற நோக்குடன் பிரபாகரன் போராட்டத்திற்கு எதிராக வரும் சக்திகளை அழித்துக்கொண்டிருந்தார். உலக நாடுகளே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு அவரின் போராட்ட வியூகங்கள் வளர்ந்து சென்றது.

முக்கிய புள்ளிகளாக கருதப்பட்ட 160 பேர் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்திருந்தது. அது மட்டுமல்லாது பிரபாகரனின் போராட்டத்தை எதிர்த்தவர்களுள் பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ, ரஞ்சன் விக்கிரமநாயக்க, லக்ஸ்மன் கதிர்காமர், காமினி திசாநாயக்க, லலித் அதுலத்முதலி, சி.வி. குணரத்ன, D.M திசாநாயக்க, ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே போன்றோர் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டனர்.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மூவரும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி காயங்களுடன் தப்பித்துக்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 3 ஆம் கட்ட ஈழப்போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கையரசிற்கும் சமாதான உடன்பாடு தொடர்பிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் நோர்வே மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கள் ஒஸ்லோ முதல் டோக்கியோ வரை முடிவடைந்த போதிலும் இறுதியில் எதுவும் பயனற்றதாகவே இருந்தது. இராஜதந்திர ரீதியில் விடுதலைப்புலிகளை கவிழ்ப்பதற்கு நோர்வே, அமெரிக்கா உட்பட பல நாடுகள் இணைந்து அவர்களின் கட்டமைப்பை சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டன.

விடுதலைப்புலிகளின் கட்டமைப்பில் 28 கட்டமைப்புக்கள் இருந்ததாக கூறப்படுகிறது. 11.03.2014 அன்று (செவ்வாய்க்கிழமை) வவுனியா நகரசபை மண்டபத்தில் CRC அமைப்பால் விடுதலைப்புலிகளின் பல புகைப்படங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதில் தற்கொலைக்குண்டுதாக்குதல்களால் இறந்தவர்களும், விடுதலைப்புலிகள் செய்த பிழைகளைச் சுட்டிக்காட்டும் வகையிலும் இக்கண்காட்சி அமையப்பெற்றிருந்தது. அதாவது விடுதலைப்புலிகளின் போராட்டம் இவ்வாறு இருந்தது என்று சான்று பகரும்




வகையில் தகவல் சேகரிப்புக்கள் அடங்கி இருந்தன.


ஆனால் வியப்புக்குரிய விடயம் என்னவென்றால் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளோ அல்லது அது தொடர்பான எந்தவிதமான படங்களும் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆயுதக் கட்டமைப்புக்களை விடுதலைப்புலிகள் வளர்த்துவந்தபோதிலும் அவர்களுக்கு இந்திய அரசுடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தது. இவ்வாயுதக்குழுக்கள் அனைத்தையுமே இந்தியாவே முன்னின்று வழிநடத்தியது. நிரந்தர பகைமையை உருவாக்கும் நோக்கிலேயே பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அரசிற்கும் மோதல்களை உருவாக்கும் வகையில் திட்டமிட்டு 1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி அவர்கள் விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமைக்கு காரணமாக அமைந்தது.

அதன் பின்னர் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அரசிற்கும் பகைமை உருவாகியது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்திய அரசு போர்க்கொடி தூக்க ஆரம்பித்தது. ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னணியில் ரணசிங்க பிரேமதாஸ



இருந்ததன் காரணமா 1993 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கானார். அதன் பின்னர் உலக நாடுகள் எங்கும் விடுதலைப்புலிகளின் போராட்டம் பிழையானது அவர்களின் தாக்குதல்களை அனுமதிக்க முடியாது. விடுதலைப்புலிகள் தொடர்பில் உலக நாடுகள் எங்கும் பிழையான பரப்புரைகளை செய்து வந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இதன் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தில் முக்கிய திருப்புமுனைகள் ஏற்பட ஆரம்பித்தது. விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை



எந்தவொரு நாடும் அங்கிகரிக்காத நிலையில் அதனை விலக்குமாறு பல நாடுகள் கோரியிருந்த போதிலும் அவர் விலக்க முன்வரவில்லை. 2008 ஆம் ஆண்டு செம்மணி புதைகுழிக்கு காரணமாக இருந்த மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா 2008 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் அது உண்மையான விடயம் அல்ல. 1999 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஆட்சியிலிருந்த போது விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி அவரின் கண்ணை இழக்கவும் நேரிட்டது. ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களுடன் தோல்வி கண்ட நிலையிலேயே விடுதலைப்புலிகள் இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு விடுதலைப்புலிகளுடைய தாக்குதல்கள் இடம்பெற்ற போதிலும் இறுதியாக 2006 ஆம் ஆண்டு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் கொழும்பில் வைத்து விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு




இலக்கானார். இத்தாக்குதலின் பின்னர் ஆரூரான் என்பவர் கைதுசெய்யப்பட்டும் இருந்தார். இத்தாக்குதலின் பின்னர் அரசாங்கம் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்தொழிக்கவேண்டுமென்ற திட்டத்தினை மேற்கொண்டது. வவுனியாவில் கண்காட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் விடுதலைப்புலிகளினது சாதனைகளை எடுத்துக்கூறும் அதே நேரம் அவர்களினால் நடத்தப்பட்ட கொடூரமான சம்பவங்களும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சகவாழ்வு மற்றும் ஒற்றுமைக்கான மத்திய நிலையம் சேகரிப்புகளை மேற்கொண்டிருந்த போதிலும் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட மக்களினதும், அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள் அதாவது ஜோசப் பரராசிங்கம், நடேசன், சுகிர்தரன் சிவராம், நிமலராஜன் இவர்கள் போன்றவர்களுடைய புகைப்படங்களையும் கண்காட்சிப்படுத்தியிருந்தால் அது வரவேற்கத்தக்க விடயம்.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சீர்குலைக்கும் வகையில் அவர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர் சட்டத்தரணி நீலன் திருச்செல்வம் அவர்கள். இவர் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகரருமாவார். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி கொல்லப்பட்டோரில் இவரும் ஒருவர். கிராமப்புறங்ளில் 109 இடங்களில் விடுதலைப்புலிகள் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக சகவாழ்வு மற்றும் ஒற்றுமைக்கான அமைப்பின் அறிக்கை தவறானதொன்றாகும். யார் எதனைச் செய்தாலும் அதன்படியே எழுதமுடியாத நிலையில் தான் இந்த சகவாழ்வு மத்திய நிலையம் இந்த அறிக்கையினை வெளியிட்டிருக்கிறது. மணலாறு, செம்மணிப புதைகுழி, சத்துருக்கொண்டான் மற்றும் திருகோணமலையின் மூதூர் போன்ற இடங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களை CRC அமைப்பு குறிப்பிடவில்லை. ஒரு தாக்குதல் அணியை பொறுத்தவரையில் அவர்களுடைய வெற்றித்தாக்குதல்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

இவை பிரபாகரனுடைய போராட்டம் ஒன்று இருந்ததற்கான ஆதாரமாகவே கருதப்படுகின்றன. 2008 ஆம் ஆண்டு கொழும்பு பிரதான புகை யிரத நிலையத்தாக்குலினை விடுதலைப்புலிகளே மேற்கொண்டிருந்ததாக இலங்கை அரசு அறிவித்திருந்தது. ஆனால் இத்தாக்குதலின் பின்னணியில் பலர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பொது இடங்கள் தொடர்பில் விடுதலைப்புலிகள் 137 இடங்களில் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக இந்த அமைப்பு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது.

அதேநேரம் யுத்தத்தின் பின்னரான ஜனாதிபதியின் அபிவிருத்திகள் தொடர்பிலும் இவ்வமைப்பு குறிப்பிட்டிருக்கின்றது. A9 வீதியின் புணரமைப்பு, புகையிரத நிலையங்கள் அபிவிருத்தி, பாலக் கட்டுமாணங்கள் வீட்டுத்திட்டங்கள், குளங்கள் புணரமைப்பு, வைத்தியசாலைகள், யாழ் பொதுநூலக அபிவிருத்தி வீட்டுத்தோட்டம் மற்றும் மீன்பிடித்துறை அபிவிருத்தி, அதிவேக நெருஞ்சாலைகள் விவசாயம், ஹம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக அபிவிருத்திகள், ஆடைத்தொழிற்சாலைகள், சிறுவர்விளையாட்டு பூங்காக்கள் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிகழ்வின் போது வடமாகாண ஆளுநர் ஜி.எச். சந்திரசிறி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அமைப்பாளர் சுமதிபால, தர்மபால செனவிரத்ன, ஜெயதிலக ஆகியோரும், வன்னி மாவட்ட இராணுவத் கட்டளைத்தளபதி ஜெனரல் பொனி



பஸ் பெரேரா, பொலிஸ் அத்தியட்சகர் ஜயசுந்தர ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் சிவநாதன் கிஷோர், மற்றும் இணைப்பாளர் முகைதீன், வர்த்தக கைத்தொழில் அமைச்சின் இணைப்பாளர் அப்துல் பாரி, வவுனியா தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் அவர்களும் பொலிஸ் மற்றும் இராணுவம், கடற்படை, இராணுவ புலனாய்வினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## த.தே.கூட்டமைப்பின் ஒற்றுமையே ஜெனிவாவிற்கு பலம் சேர்க்கும்

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட ஜெனிவாவின் அமர்வுகள் தமிழ் மக்களுக்கும், தமிழ் அரசியல் வாதிகளுக்கும் முகத்தில் முக்காடை போடும் அளவிற்கு அமையப்பெற்றுள்ளதாக இலங்கையரசு கூறிக்கொண்டிருக்கின்றது. இதே நேரம் ஜெனிவாவில் பிரபாகரனின் போராட்டங்களையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டதான கொடுமைகளுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனூடாக தமிழ் மக்களின் பலம் வளர்ச்சி கண்டிருக்கின்றது என்றே கூறவேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் ஜெனிவாவில் வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டுமாயின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் மாகாணசபை அமைச்சு மற்றும் அதனது உறுப்பினர்களினதும் ஒற்றுமை அவசியமாகும். விடாக்கொண்டன் கொடாக்கொண்டன் போல் மாகாணசபையும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் இருந்துவருமாகவிருந்தால் அதனை அரசு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும். அவ்வாறான செயற்பாட்டையே அரசு தற்பொழுது செய்துவருகிறது. மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை வழங்கி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை ஓரங்கட்டும் ஒரு செயற்பாடாக அரசாங்கம் செயற்பட்டுவருகிறது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினூடாகவே மாகாணசபையில் உள்ளவர்கள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதுடன் அவர்கள் யார் என்ற முழுவிபரம் அதன்பின்னரே மக்களுக்குத் தெரியும். மாகாண சபையில் உள்ளவர்கள் தங்களால் எல்லாவற்றையும் சாதிக்கமுடியும் என நினைக்கின்றார்கள். அரசியலில் அனுபவம் இல்லாதவர்களின் செயற்பாடுகளே இவ்வாறு அமையப்பெறுகிறது. போர் முடிவடைந்து 4 வருடங்கள் கடந்துள்ள இந்நிலையில் அரசாங்கம் முன்வைக்கும் தீர்வுத்திட்டங்களுக்கு எதிரும் புதிருமான கருத்துக்களை தமிழ்த்தரப்பில் உள்ளவர்கள் தெரிவிக்காமல் கலந்தாலோசித்து அதன் ஊடகப்பேச்சாளருடாக இணைந்து செயற்பட்டு தமிழ்மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தெட்டத்தெளிவான செய்திகளை கூறவேண்டும்.

அவ்வாறு செயற்படுகின்றபொழுது கட்சிகளுக்கிடையே பிளவுகள் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளலாம். சமாதானமான இந்தக்காலகட்டத்தில் அரசாங்கத்துடன் அதிகூடிய பேச்சுக்களில் கலந்துகொண்டு தமிழ்மக்களுக்கான தீர்வுத்திட்டத்தினை ஒரு குடையின் கீழ் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் மீண்டும் கேட்பதனூடாக தமிழ்மக்களின் பலமும் மாகாணசபை பலமும் வலுச்சேர்க்குமே ஒழிய முரனான கருத்துக்களைத் தெரிவிப்பதனூடாக அல்ல.

போராட்ட காலகட்டத்தின் போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் மீது இருந்த எதிர்ப்புக்களைப்போன்று தற்போது இல்லை. தற்பொழுது எங்கும் சென்று வருவதற்கான சூழ்நிலை நிலவிவருகின்றது. ஜெனிவா தீர்மானங்களோ அல்லது அமெரிக்காவின் தலைமீட்டில் இனிவரும் காலங்களில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தமிழ்மக்களுக்கு நன்மை பயக்கவேண்டுமாயின் எமது ஒற்றுமையை நாம் பலப்படுத்த வேண்டும்.

உதாரணமாக பிரபாகரனிடமிருந்து கருணா அம்மான் பிரிந்துசென்றபோது அதனுடைய விளைவு பாரதூரமாகவிருந்தது. கருணா அம்மான் விடுதலைப்புலிகளின் கட்டளைத்தளபதியாக இருந்தகாலகட்டத்தில் இராணுவத்தினர் அவர்களின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்கு ஒரு அடியேனும் நகர முடியாதிருந்தது. பிரிந்து சென்று காட்டிக்கொடுத்ததன் விளைவே தமிழ் மக்களின் இந்த நிலைக்குக் காரணமாகும்.

இதனை திட்டவட்டமாக UNP அரசாங்கம் நிகழ்த்தி முடித்தது. இவ்வாறு இருக்கின்ற பொழுது இக்காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி என்றோ அல்லது ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட், ஈரோஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி என்று பாகுபாடு காட்டாது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்கின்ற ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு தமிழ்மக்களுக்கான விடுதலையை பெற்றுக்கொடுக்க அனைத்துக் கட்சிகளும் முன்னின்று உழைக்கவேண்டும். சகோதரப்படுகொலையின் காரணமாகவே இன்று தமிழ்மக்களின் நிலைமை பரிதாபகரமாக காணப்படுகின்றது. இந்த வாசகத்தை தமிழ் அரசியல்வாதிகளாகிய ஒவ்வொருவரும் மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவோமாகவிருந்தால் ஜெனிவாத் தீர்மானங்களில் தமிழ் மக்களுக்கு வெற்றிவரும் என்பது நிச்சயம். இல்லையேல் காலம் கடந்த ஞானம் அவசியம் இல்லாமல் போகும்.


08

தலைக்கு மேலே சூரியன் எரிக்க படை நகர்வைத் தடுக்கவேண்டும் என மனம் பதைக்க விதுஷா, மைதிலி, பமிலா உட்பட எல்லோருமே ஓடித்தான் போனோம் அந்த வீதி நீளமும் காதறுத்ததாலும் ஓட்ட வேகத்தை தடைப்படுத்தியதாலும் எம்மால் கழற்றி எறியப்பட்ட செருப்புகள் கிடந்தன. கால்கள் கொப்பளிக்க உடை முழுவதும் வியர்வையால் நனைய இராணுவம் என்று எல்லா வாய்களும் சொல்லின. எங்கே என்பது தெரியவில்லை

எங்கள் படையணியின் விநியோக மையங்கள், களஞ்சியங்கள், தங்களுக்கெல்லாம் தென்மராட்சியிலே இருந்தன. மட்டுவில் பகுதியூடாக வந்த இராணுவம் எமது தளங்கள் அமைந்திருந்த பகுதியை நெருங்க அங்கிருந்த போராளிகள் தளங்களைக் கைவிட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மிக வடமராட்சியில் நின்ற மகாவின் பிளாட்டூனும் அசோகாவுடன் நின்ற ஏனையவர்களும் கால்நடையாகவே வந்து சேர்ந்து விட்டனர். மூன்றாம் நாளும் சண்டை தொடர்ந்தது. மக்களை அவரவர் வீடு திரும்பும்படி இராணுவம் அழைத்தது. வேறுவழியின்றி மக்கள் வீடுதிரும்பினர்.

மீசாலைப்பகுதியிலே யாழ் நெடுஞ்சாலையை ஊடறுத்துக் காவல் நிலைகளை அமைத்த உடனேயே வேவு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டோம்

# உலகவரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



கனகம் புளியடிசந்திக்குப்போன எங்களை பன்றித்தலைச்சி அம்மன் கோயில் கடந்து அடுத்து இருந்த குடியிருப்பு ஒன்றினூடே ஆவரங்காலைப் பார்த்த திசையில் மிக வேகமாக நிலைப்படுத்தினார். விதுஷா வந்த வேகத்திலே மண்வெட்டியால் நிலத்தில் ஒருமுறைதானும் கொத்த முன்னரே இராணுவத்தினரை நாம் எதிர் கொண்டோம்.

பன்றித்தலைச்சியம்மன் கோயிலடியில் காப்புநிலைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை பனைமரங்கள், மரங்கள், பற்றைகள், வீடுகள் இன்னும் என்னென்ன எமக்கு காப்பு கொடுத்ததோ, அவற்றைப்பயன்படுத்தி காப்பெடுத்து எதிர்த்தோம். மாதுதியின் LMG அகல் கக்கியது. பிரியாவின் RPG எறிகணைகளை வீசியது. ஆவ்வாறே ஒவ்வொரு போராளிகளின் சுடுகலன்களும் சீறின.

நாங்கள் அவ்விடத்தில் நின்று தொடர்ந்து தாக்குதல் செய்ய காப்பரண்கள் இல்லை என்பதைவிட தொடர்ந்தும் அப்பகுதியிலிருந்த மக்கள் நடமாட்டம்பெரியதடையாகவேஇருந்தது. இராணுவத்தை உடனேயே தாக்குவதா, மக்கள் வெளியேறும்வரை காத்திருப்பதா என்றநெருக்கடி பாரியதாகஎழுந்தபோதும் எங்களின் ஒரு அணி பொருட்களோடு வெளியேறிக்கொண்டிருந்த மக்களுக்கு உதவிசெய்து அவர்களை வேகமாக பின்னகர்த்திக்கொண்டிருக்க, ஏனையவர்கள் தொடர்ந்தும் தாக்கிக்கொண்டேயிருந்தோம், அவ்விடத்தில் கப்டன் பிரியாவும் மேஜர் மாதுரியும் வீரச்சாவடைந்னர்.

சுற்றிச் சுற்றி நாம் கனகம்புளியடிக்கு வரமுதலே பக்கவாட்டாகவே வண்ணாத்திப்பாலத்தினூடாக மட்டுவில் பகுதியில் படையினர் உட்புகுந்தனர். மறுபுறம் முதல் நாள் இரவே அமைதி நகர்வை மேற்கொண்டு ஊர்மனையூடாக, சிறிய வீதிகள் ஒழுங்கைகளுடாக நுணாவிலுக்குள்நகர்ந்துவந்தஇராணுவம் மக்களை தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பியது. கதவைத்திறந்த மக்களின் வீட்டு வாசலில் இராணுவம் நின்றது. உளவியல் கலந்த ஒரு தந்திரோபாய யுத்தமாகவே இது நடந்தது.

குடியிருப்புக்குள் புகுந்த இராணுவம் அன்று மக்களை எதுவும் செய்யவில்லை. ஆதரவு கூறியது. சண்டைக்கு தயாராக நின்ற அணிகளைச் சந்திக்காமல் விலகி ஊருக்குள் புகுந்த இராணுவம் எங்கே நிற்கின்றது என்பதை ஒருவராலும் சரியாக அறியமுடியவில்லை எங்கோ இராணுவம் நிற்பதாக நினைத்து வீதியிலிறங்கிய மக்கள்திடீரெனதம்முன்இராணுவத்தைக் கண்டு ஒழுங்கைகளுக்குள்ளால் ஓடிக்கொண்டிருந்தனர். இராணுவம், அவசர அவசரமாகவே கனகம்புளியடி சந்தியிலிருந்து நுணவில் சந்திக்கு வரும் வீதியையும் இடையில் குறுக்கறுத்து நிலைகள் அமைக்கப்பட்டன.

கனகம்புளியடி சாவகச்சேரி வீதியை ஊடறுத்த எங்கள் கொம்பனி வீதியின் வலது புறமாக குறிப்பிட்ட தூரம் வரை நிலைகொண்டது. கடைசியாக நின்றது மைதிலியின் வேவு அணி. அவர்களின் கண்ணில் தமக்கு வலது புறமாகப் படை ஊர்திகள் போய்க்கொண்டிருப்பது பட்டது. கால்நடையாகவும் படையினர் போய்க்கொண்டிருந்தனர். எனவே அது ஒரு வீதியாக இருக்க வேண்டும் என்பதை ஊகித்த மைதிலி பக்கவாட்டாக படையினர் தம்மைக்கடந்து கொண்டிருக்கும் விடயத்தை விதுஷாவுக்கு அறிவித்தார். ஆனால் அதற்கிடையிலே புத்தூர் கனகம்புளியடியிலிருந்து போகும் வீதியால் போய் சந்தியேறிவிட்டிருந்தனர்.

புத்தூர் சந்திக்கப்பால் படையினர் பதுங்கியிருந்தது ஆரம்பத்தில்எவருக்குமே தெரியாது யாழ் நெடுஞ்சாலையால் பிக் - அப் ஊர்தியை ஓடி வந்த சாதனா புத்தூர் சந்தியில் திரும்பி ஊள்ளே போ-கவும் இராணுவம் சுடத்தொடங்கியது. உள்ளே இருந்த முல்லை உடனே வீரச்சாவடைந்தார். சாதனாவும்மற்றவரும் கதவு திறபடாததால் கண்ணாடியை உடைத்துப் பாய்ந்து ஆயுதங்கயோடு வந்து சேர்ந்துவிட்டனர்.

இப்போது யாழ் நெடுஞ்சாலையை மீசாலைச் சந்தியருகே ஊடறுத்து நாங்கள் நிலைகளைக் கச்சாய் கடற்கரை வரை அமைத்தோம். கடற்கரையை அண்டிய வெளிப்பகுதியால் ஊர்மனைக்குள்ளால் வலிந்த தாக்கதல் நடைபெறலாம் என எதிர்பாக்கப்பட்டது. படையினரின் தாக்குதல் தொடங்கியதும் ஊடுருவி முன்னேறித் தாக்குவதற்காக இதுவரை எழுதுமட்டுவாலில் பயிற்சிக்காக நின்ற தர்ஷாவின் அணி மீசாலைக்கு வந்தது.

முகுந்தா, மேஜர் அரசி, லெப் கௌதமி மூவரும் சாதாரண மக்களாக உருமாறினர். மக்களோடு மக்களாக சாவகச்சேரி நோக்கி நகர ஆரம்பித்தனர். இராணுவத்தினரிடம் தண்ணி வாங்கி குடித்தவாறே ராங்கிகளை ராங்கிகளின் சுடுகுழல் நின்றதிசையை ஆயுதபலத்தைக் கண்களால் அளந்துகொண்டனர். இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து பகுதிக்குள்ளிருந்த எமது தளமொன்றுக்குச் சென்று அங்கு நின்ற மிதிவண்டியை எடுத்துக்கொண்டு மீசாலைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களின் தரவுகளின்படி உள்நுளைந்துதாக்கம்திட்டம்ஒன்றுதயார் செய்யப்பட்டு அணிகள் நகர்த்தப்பட்டன. ஆனால் அதற்கிடையிலே படையினர் நகரத்தொடங்கிவிட்டதால் அது தடைப்பட்டுப்போனது.

முகுந்தா சேகரித்த வேவுத்தகவல்களின்படியே மறுநாள் காலை சாவகச்சேரி கச்சாய் வீதியால் கடற்கரைப்பகுதியை அண்டியதாய் படைநகர்வு இருந்தது. சாவகச்சேரி மீசாலைப்பழைய புகையிரத நிலையம் தொடங்கி லெப். சீலன் பூங்காவரை பமிலாவின் கொம்பனி நிலைகொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அசோகதவின் கொம்பனி கடற்கரைவரை நிலைகொண்டது.


கச்சாய் பகுதியில் நிலைகொண்டிருந்த கொம்பனியுடன் 23 ஆம் திகதி இராணுவம் வந்து மோதியது. சுண்டை மூண்டு விட்டது. பறக்கும் ராங்கி எனப்படும் MI 24 ரக உலங்கு வானூர்திகள் பதிந்து சுட்டன. ஏறிகணைகள் எங்கும் வீழ்ந்து வெடித்தன. அன்றைய சண்டையில் ஈற்பட்ட இழப்புக்களால் தமது முன்னேற்ற நடவடிக்கையைக் கைவிட்டு இராணுவம் பின் வாங்கியது.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 26. | வீ.வே பிலகரி | குமுதினி சின்னராசா | யாழ்ப்பாணம் | 1996.07.18 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 27. | வீ.வே அக்கினோ | செல்வராணி சிற்றம்பலம் | மட்டக்களப்பு | 1996.07.18 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 28. | வீ.வே மாதுமை | வளர்மதி மாணிக்கம் | யாழ்ப்பாணம் | 1996.07.18 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 29. | வீ.வே அபிராமி | கிருஸ்ணாம்பாள் சிவப்பிரகாசம் | மன்னார் | 1996.07.18 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 30. | வீ.வே கமலா | ரதிதேவி சுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் | 1996.07.18 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |

# 2020 ஆம் ஆண்டளவில் இலங்கை அமெரிக்காவின் காலணித்துவ நாடாக மாற்றம் பெறலாம்




அனைத்துலக நாடுகளினதும் பிரச்சினைகளில் ஒன்றுதான் அமெரிக்க நாட்டின் தலையீடாகும். முழு அரபு இராச்சியத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பதே அமெரிக்காவின் தற்போதைய இலக்காகும். அதனொரு கட்டமாகவே அமெரிக்காவின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைகிறது என லாம். தற்போது அதனது தேவை கருதி பிரச்சினையை இலங்கை பக்கம் திருப்பிவிட்டுள்ளது. அது எவ்வாறெனில் 10 வருடங்களுக்குப் பின்னர் இலங்கையை தனது காலணித்துவ நாடாக மாற்றியமைப்பதற்கான திட்டமாகும். ஆரம்பகாலத்தில் இலங்கை மன்னராட்சிக்கும அதனைத்தொடர்ந்து அந்நியராட்சிக்கு உட்பட்ட நாடாகவே காணப்பட்டது. 1505 – 1658 ஆம் ஆண்டுவரை போர்த்துக்கேயரும், 1958 – 1796 வரை ஒல்லாந்தரும், 1796 – 1948 வரை ஆங்கிலேயரும் இலங்கையை ஆட்சி செய்துவந்தனர்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களை கைப்பற்றினார்களே தவிர அவர்களினால் கண்டி இராச்சியத்தை கைப்பற்றமுடியவில்லை. அத்துடன் இவர்கள் சட்டம், சமயம் ஆகிய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் அரசியலில் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை. ஆங்கிலேயர் கரையோரங்களை கைப்பற்றியது மாத்திரமின்றி கண்டி இராச்சியத்தினையும் கைப்பற்றி, பொருளாதார ரீதியிலும் பல மாற்றங்களைக் கொண்டுவந்தனர். அதுவே இன்று அத்துறையில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்திக்கு காரணமாகும். அரசியலில் பிரித்தானியா மாதிரியான பாராளுமன்ற ஆட்சி முறைமையையும், பொருளாதாரத்தில் பெருந்தோட்டத்துறையில் ஏற்றுமதி இறக்குமதி கொண்ட பொருளாதாரத்தையும் உருவாக்கினர்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட இம்மாற்றங்களே இன்றைய இலங்கையின் நிலைக்குக் காரணமாக உள்ளது. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு பிரித்தானியா இலங்கையின் பெரும்பாலான கரையோரங்களைக் கைப்பற்றினாலும் 1798 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

1798 – 1802 ஆம் ஆண்டுவரை இலங்கையில் நடைபெற்ற ஆட்சி இரட்டையாட்சியாகும். அதாவது வரி, வர்த்தகம் போன்ற விடயங்களுக்கு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனிகள், பாதுகாப்பு சிவில் போன்ற விடயங்களுக்கு பிரித்தானிய அரசையும் இணைத்து கொண்டுசெய்த ஆட்சிதான் இரட்டை ஆட்சியாகும். 1892 இல் கைச்சாத்திடப்பட்ட எமினியஸ் உடன்படிக்கையைத்தொடர்ந்து இலங்கை பிரித்தானிய .காலணித்துவத்திற்கு உட்பட்ட நாடாக மாறியது.

இந்தமுறைமையினைமாற்றி அமெரிக்கா தனது காலணித்துவத்துக்குக்கீழ் உட்பட்ட நாடாக இலங்கையை மாற்றியமைக்க தீர்மானித்துள்ளது. இலங்கையின் அனைத்து நிர்வாக விடயங்களும் பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அவருக்கு ஆலோசனை கூற ஒரு சபை உருவாக்கப்பட்டது. அதில் இராணுவத்தளபதி, குடியேற்றநாட்டுகாரிய தரிசி, பிரதம நீதியரசர்கள் போன்றோர் இடம்பெற்றனர்.



1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தினை கைப்பற்றும் நோக்கில் பிரித்தானிய படையெடுப்பொன்று மேற்கொண்டபோது, கண்டியர்களின் கொரில்லாத்தாக்குதல், மலேரியா நோய், காட்டுநோய் போன்றவற்றின் காரணமாகவும் சீரற்ற காலநிலை காரணமாகவும் போராட்டம் தோல்வியடைந்தது. பிரித்தானியர் கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்ற முனைந்தபொழுது கண்டி பிரதானிகளின் சில நிபந்தனைகளுக்கு உடன்பட்டிருந்தது. கண்டி இராச்சியம் தனியாக ஆளப்படும். பௌத்த மதம் அரச ஆதரவோடு தொடர்ந்தும் உரிய முறையில் பேணிப்பாதுகாக்கப்படும். அதேபோன்று இன்றைய காலகட்டத்தில் அமெரிக்க அரசு இலங்கையரசுடனான இரகசிய பேச்சுக்களை அரச இராஜதந்திரிகளுடன் பேசிவருகிறது.

ஏற்கனவே அமெரிக்க அரசு இலங்கையில் அமைந்துள்ள திருகோணமலை, கொழும்புத் துறைமுகங்களை, கடற்கரையோரங்களை தன்னகத்தே கொண்டுவர முயற்சித்துவருகிறது. இதற்கு முட்டுக்கட்டையாக இந்தியா, சீனா போன்ற நாடுகள் விளங்குகின்றன. பலமுறை அமெரிக்க அரசு இலங்கை அரசுடன் இரகசிய பேச்சுக்களை நடத்தியபோதிலும் அவைசாத்தியமற்றுப்போயின. ஆனால் தற்பொழுது மீண்டும் ஒரு உலகப்போர் ஏற்படுமானால் ஆசியப்பிராந்தியத்தில் தனக்கான ஒரு தளம் இல்லாமல் போகும் என்கின்ற காரணத்தினால் தனது போர் வியூகங்களை சரியாக செய்யமுடியாமையினாலும் அமெரிக்க அரசு இலங்கையரசிற்கு பல நிபந்தனைகளைக் கொடுத்துள்ளது. போர்க்குற்றம் தொடர்பில் இலங்கையரசை ஆரம்பகட்டத்தில் நெருக்கிய அமெரிக்கா தற்பொழுது அதனை தளர்த்திவிட்டுள்ளது.

காரணம் அமெரிக்கா எவற்றையெல்லாம் கேட்கிறதோ அவற்றையெல்லாம் தருவதற்கு இலங்கையரசு தயாராக இருக்கிறோம் என வாக்குறுதியளித்தமையினாலேயே. இன்று இலங்கையரசு போர்க்குற்றம் தொடர்பில் துணிவான அறிக்கைகளை தெளிவாக வெளியிட்டிருக்கின்றது. போர்க்குற்ற விசாரணைகளை மும்முரமாக நின்று செயற்படுத்தியது அமெரிக்காதான். ஆனால் தற்பொழுது ஓரமாக ஒதுங்கியுள்ளது. அரசியல் இலாபத்திற்காக எமது தாய்நாட்டை அந்நியர்களின் காலணித்துவத்திற்கு உட்படுத்தும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா தான் நினைத்ததை சாதித்துவிடும் பட்சத்தில் ஒரு சர்வாதிகார போக்கை கடைப்பிடிக்கும் நிலைமை ஏற்படும். இதேபோன்றே அக்காலகட்டத்தில் பிரித்தானியர்களும் செய்தார்கள். கண்டி இராச்சியம் தொடர்பாக 1818ஆம் ஆண்டில் கண்டியில் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டது. அதனை வெள்ளைக்கிளர்ச்சி என்பர். பிரித்தானிய இராணுவத்தினரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர். இந்த நிலையில் 1827இல் இலங்கையின் நிர்வாகத்தை சீர்படுத்துவதற்காக எதிர்காலத்தில் கண்டிக்கலவரம் போன்ற பெரியதொரு கலவரம் வரக்கூடாது என்பதற்காகவும் முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதற்காகவும் பெருந்தோட்டத்துறையை தனியாருக்கு தருவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கூறப்பட்ட கொள்கைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதாககோல்புறூக், கெமரூன் தலைமையில் ஒரு குழு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அக்குழுவினர் இலங்கையில் சில காலம் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து குறிப்பாக கமரூன் சட்டம், நீதி தொடர்பாகவும் கோல்புறூக் அரசியல் தொடர்பாகவும் ஆராய்ந்து அதனடிப்படையில் அரசியல் அமைப்பொன்றை உருவாக்கினர்.

இதுவே 1833 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதுவே 1833 ஆம் ஆண்டில் கோல்புறூக், கமரூன் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது. கோல்புறூக் ஆணைக்குழுவின் நிபந்தனைகள்:

1. இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவருவதற்கு தேவையான வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சுதந்திரமான சந்தைச் சூழலை ஏற்படுத்தல்.
2. குடியேற்ற நாட்டாட்சி நிர்வாக அதிகாரிகள் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடைசெய்தல்.
3. இலங்கை நிர்வாகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவருதல்.
4. மலைநாட்டில் நிலவிய தனியான நிர்வாகத்தை முடிவுக்கு கொண்டுவருதல்.
5. இலங்கையின் நிர்வாகத்தை 05 மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்தையும் அரசஅதிபர்களுக்கு கீழ் கொண்டுவருதல்.
6. இலங்கைக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் சுதேசிய உயர் வர்த்தக உறுப்பினரும் நிர்வாகத்தில் பங்கேற்கும் முகமாக பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளுதல்.
7. தேசாதிபதிய சட்ட நிர்வாக இணைத்து ஆட்சிபுரியும் ஒருவராக மாற்றல்.

முக்கிய விடயம் என்னவென்றால் அமெரிக்காவின் காலணித்துவ நாடாக இலங்கை மாற்றமடையும் போது ஒரு சுதந்திரமான நீதித்துறையிலான உயர் நீதிமன்ற நீதிபதியொருவரை அமெரிக்க அரசினால் நியமிக்கப்படுவார் அதன்படி,

உயர் நீதிமன்ற தலைமையின் கீழ் ஒரு ஐக்கிய நீதிமன்றினை உருவாக்கல், மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கல், சுதேசி அவர்களுக்கும் தனியாக இயங்கிவரும் நீதிமன்றங்களை உரிய நடவடிக்கை எடுத்தல், இலங்கையில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.

1833–1910ஆண்டுவரைசுமார்77ஆண்டுகள் வாழும் கோல்புறூக் அரசியலில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இங்கு உருவாக்கப்பட்ட சட்டமன்றம் எதிர்காலத்தில் பாராளுமன்றம் உருவாக வழியமைத்துக்கொடுத்தது, இதன் காரணமாக பிரதிநிதித்துவ முறைமை அறிமுகமானது, தேசாதிபதியிடம் செறிந்து காணப்பட்ட அதிகாரங்கள் சட்ட நிரூபண சபையிடமும் சட்ட நிரவாக சபையிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆங்கிலக்கல்வி அறிமுகமானது. ஆங்கிலம் கற்ற உயர் மத்தியினர் எழுச்சிபெறச்செய்தனர்.

வலுவேறா கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது, பொருளாதார விடயத்தில் தனியொரு பங்கேற்பான வாய்ப்பு இடம்பெற்றது. இதனால் இந்திய பாகிஸ்தானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுசெய்தனர்.

இதன் காரணமாகவே இலங்கையில் ஆங்கிலம் பேசுவோரின் தொகை அதிகரிக்கத்தொடங்கியது. கலாசாரம் மாற்றம் பெறத் தொடங்கியது. இந்த யாப்பு திருத்தம் தொடர்பில் ஏற்பட்ட குறைாபடுகளை பாரக்கின்றபொழுது,

1. பொருளாதார முறைமையின் காரணமாக கரையோர விவசாய முறைமை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டது.
2. ஆங்கிலக்கல்வியின் பரவல் இலங்கையின் பாரம்பரிய கலாசாரத்தை சீர்குழைப்பதாக அமைந்தது. இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம் பல குறைபாடுகளைக் கொண்டதாக காணப்பட்டது.

இவ்வரசியல் சீர்திருத்தம் இலங்கைக்கு பொருத்தமானதாக அமையவில்லை. 77 ஆண்டு காலமாக இந்த கோல்புறூக் அரசியல் இருந்துவந்தது. தற்பொழுதும் பல அரசியல் வாதிகளாலும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் மாற்றம் ஒன்று இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை அடிப்படையாக வைத்துப்பார்க்கின்றபொழுது, மாட்டுக்கு மணிகட்டப் போவது யார்? அது அமெரிக்காவாகத்தான் இருக்கும். அக்காலம்தொட்டு இன்று வரைக்கும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமான தொடர்புகள் இருந்தவண்ணமே உள்ளன. இவை படிப்படியாக தோற்றம் பெற்று ஆசியப்பிராந்தியத்தில் தனக்கு ஒரு பிரச்சினை வருகின்ற பொழுது அதனை மாத்திரம் கரிசணை கொண்ட இலங்கை அரசின் மீது அமெரிக்கா பல நெருக்கடிகளை கொடுக்கிறது.

12 ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

# சனல் 4 ஆவணப்படத்தினால் ஐ.நாவில் சிக்கப்போகும் இலங்கை அரசு

இலங்கை விவகாரம் தொடர்பாக சனல் 4 தொலைக்காட்சி அக்கறை காட்டுவது ஏன் என்று கடந்த வாரம் எமது தினப்புயல் பத்திரிகையில் செய்திகள் வெளியாகியிருந்தது. வியாபார நோக்கம் அல்லது தமிழ்மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் என லாம். காரணம் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியிலிருந்து சனல் 4 ஊடகம் இலங்கை விவகாரம் தொடர்பாக அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது.

கையடக்கத் தொலைபேசிகளூடாக இராணுவத்தினரிடமிருந்து பெறப்பட்ட புகைப்படங்களையே சனல் 4 ஊடகமானது இலங்கையரசிற்கெதிரான போர்க்குற்ற ஆவணப்படங்களாக தயாரித்து வெளியிட்டுள்ளது. மேலும் தம்மிடமுள்ள ஆவணப்படங்களினை வெளியிடுவதற்கு தயாராகவுள்ளது. இத்தொலைக்காட்சியானது புலனாய்வு எடுத்திருக்கிறார். அதில் சிங்களம் பேசும் படையினர் காணப்படுகிறார்கள். அவர்களின் உடைகள் ஒரு விசேட அணியைச் சேர்ந்தவர்களாகக் காட்டுகின்றன. அவர்கள் சிரிக்கிறார்கள், ஊக்கப்படுத்திக் கொள்கிறார்கள் புலிப் போராளிகளின் சாவுகளை கொண்டாடுகிறார்கள். சடலங்களின் மீது அசிங்கமான பால்நிலை வன் செயல்களை மேற்கொள்கிறார்கள்.

போராளிகள் போன்று தோன்றும் இவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதும் எமக்குத் தெரியாது. இந்தப்படங்களை பிரபல்யமான விஞ்ஞான முறையில் ஆய்வுகள் செய்பவரான வைத்தியர் றிச்சார்ட் யப்பர்ட் பரிசோதனை செய்துள்ளார். சடலங்களில் காணப்படும் காயங்கள் உண்மையானவை. இப் படத் தொகுதி போலியானவையல்ல என்று காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதியாக விரிவான ஆய்வின் பின்னர் அவர் கூறினார். "எதுவித சோடிப்புகளையோ, கையாடல்களையோ என்னால் காண முடியவில்லை இந்த வீடியோப் படங்கள் உண்மையானவை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளன. காட்டப்படும் சம்பவங்களை அவை சரியாக பிரதிபலிப்பவையாக உள்ளன என்று கூறினார்.



இப்படி தொகுப்பில் மிகத் தெளிவாக உள்ளது என்னவென்றால் பால்நிலை கொடுமைகள்தான் பெண்களின் உடல்கள் ஆண்களின் உடல்கள் அல்ல - உடைகள் களையப் பெற்று மீண்டும் மீண்டும் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளும் மோசமான போர்க்குற்றங்களை சிறுவர்களை போரில் ஈடுபடுத்தியது பொதுமக்கள் · குடியிருப்புகள் மீது குண்டு வீசியது போன்றவைகளை செய்துதான் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தனது சொந்த செயல்களை நியாயப்படுத்துவதற்கு அரசு இவைகளைப் பயன்படுத்த முடியாது.

புலிகளின் தொலைக்காட்சி அறிவிப்பாளர் இசைப்பிரியா உடைகள் களையப் பெற்று கொல்லப்பட்டதான படங்களை நாம் வெளியிட்ட போது, மோதலின் இடையில் சிக்கி அவர் உயிர் இழந்ததாக அரச தரப்பினர் விடாப்பிடியாக கூறி வந்தார்கள். ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்னர்



கட்டளைத் தளபதியான அவரது சகோதரர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நோக்கியும் போகின்றது.

இலங்கை இராணுவத்தின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் வெளியாக்கப்பட்டுள்ள புதிய காணொளி தொடர்பில் தாங்கள் அறிந்திருக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து, அதன் பேச்சாளர் இதனை தெரிவித்தார்.

சனல் 4 தொலைக்காட்சி, இலங்கை படையினரின் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை உறுதிப்படுத்தும் வகையிலான காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட போது, முதலில் அதற்கு பதிலளிக்க மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இந்த காணொளியை தாங்கள் இன்னும்




நடவடிக்கைகளை இலங்கை நாட்டில் முடக்கிவிட்டுள்ளது. அது எவ்வாறெனில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும், ஊடகவியலாளர்களூடாகவும், இலங்கையின் முன்னணி ஊடகங்களில் பணிபுரிபவர்களூடாகவும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இராணுவத் தலைமைக் காரியாலயங்களில் பணிபுரியும் உயரதிகாரிகளினூடாகவும், அவர்களின் வெளிநாடுகளில் வாழும் உறவினர்களூடாகவும் இரகசியமான ஆவணப்படங்கள் சனல் 4 தொலைக்காட்சிக்கு ஆதாரங்களாக கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆதாரங்கள் மூலமாக பிரச்சினைகளுக்குப் தீர்வு காணுவதை விடுத்து இலங்கை அரசின் ஆதரவாளர்கள் எங்கள் ஊடகப் பணிகளின் மீது தொடர்ச்சியாகப் பகைமையோடு தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று சனல் 4 ஆவணப் படத்தின் தயாரிப்பாளர் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக் கால கட்டத்தில் இடம்பெற்றதான போர்க்குற்றங்கள் தொடர்பான தமது ஆவணப்படங்கள் குறித்து கெலும் மக்ரே எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத் தொகுப்புகள் மிக வெறுப்பூட்டுபவையாக இருக்கின்றன. பெண் போராளிகளின் உடல்கள் தொடர்பாகப் படையினர் நடந்து கொண்டுள்ள முறைகள், ஒரு முறை சார்ந்த மிருகத்தனமான கலாசாரம் மற்றும் பால்நிலை வன்செயல்களை அவை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தப் படங்களைக் கைத் தொலைபேசியில் ஒரு சிப்பாய் முடிவுக்கு அவர் வந்தது மட்டுமன்றி அந்தக் காயங்கள் போரின் போது ஏற்பட்டவையாக தெரியவில்லை.

இது போரின் பின்னர் அல்லது ஒளித்திருந்து தாக்கிய போது ஏற்பட்டவை போல் காணப்படுவதாக அவர் ஆச்சரியம் தெரிவித்தார்.

இந்த சடலங்களில் குறைந்தது இரண்டின் மீது காணப்பட்ட காயங்களை தலைகளில் ஏற்பட்டிருந்த அழமான காயங்களை அவரால் அடையாளம் காண முடிந்தது. உயர் வேகத் துப்பாக்கி வேட்டுகளால் இவை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் காயங்களின் ஒழுங்கைப் பார்க்கும்போது இவை கொலை செய்யப்படுவதற்கான வேட்டுகள் என்பதை தம்மால் ஒதுக்க முடியாது என்றும் கூறினார்.

பிரிட்டிஷ் தமிழ் பேரவையினால் எமக்கு வழங்கப்பட்ட வீடியோ படங்களும் பிரிட்டிஷ் நீதிமன்றங்களுக்கு பணியாற்றுகிறவரான கௌரவமான ஒரு டிஜிட்டல் பட ஆய்வாளரால் சுதந்திரமாக பரிசோதிக்கப்பட்டு உண்மையானவை அவர் படைகளினால் உயிருடன் பிடிபட்டிருக்கும் படம் எமக்கு கிடைத்தது. அவர் ஆயுதம் இல்லாமலிருந்தார் உயிருடன் காயமின்றி காணப்பட்டார்.

இசைப்பிரியா மோதலின் போது இடையில் சிக்கி சாகவில்லை. அரச படைகளின் காவலில் இருந்தபோது அவர் இறந்துள்ளார்.

அந்த அடிப்படையில் தான் இப்பொழுது கிடைத்துள்ள ஆதாரங்கள் ஆராயப்பட வேண்டும். ஒரு முறையான திட்டவட்டமான வகையில் வன்முறைகள் பயன்படுத்தப்பட்டு கொலைகள் நடைபெற்றுள்ளன. இல்ங்கையில் இருப்பதாகக்கூறப்படுவது போல் ஒழுக்கமும் செயன்முறையும் கொண்ட ஒரு இராணுவத்தில் இந்த மாதிரி செயற்பாடுகளுக்கு கட் டளையிடும் பொறுப்பானது மிக உச்ச நிலை வரைக்கும் தடயங்களை காண முடியும்.

இதன் கருத்து என்னவென்றால் அது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வரைக்கும் செல்கிறது மற்றும் ஆயுதப் படைகளின் சகல நிலைக் பார்க்கவில்லை என்றும், இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் பேச்சாளர் ஸ்டீவன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சியிடம் போதிய ஆதாரங்கள் இருக்கின்ற பொழுது இலங்கையரசினை அசைக்க முடியாத நிலை தோன்றுகிறது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் ஊன்றுசக்தி இருப்பதாக சனல் 4 ஊடகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஈராக், ஈரான், சிரியா போன்ற நாடுகளில் ஒரு சில போர்க்குற்றங்களைவைத்தே அமெரிக்க அரசு அந்நாட்டிற்கு படையெடுத்துபாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டும், துண்டங்களாக வெட்டிக் கொல்லப்பட்டும் உள்ளனர். ஆண்பெண் இருபாலாரும் மரம் வெட்டும்வாலால் கூட வெட்டிக்கொலை செய்யப்பட்ட காட்சிகளும்இருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் அமெரிக்க அரசு திடீரென்று இறங்கி தனது செயற்பாடுகளை செயற்படுத்த தயக்கம் காட்டி வருகின்றது.

ஆனால் உண்மையில் யார் இந்த செயல்களைச் செய்தார்களோ அவர்களுக்கான தண்டனை வழங்கப்படவேண்டும். சனல் 4 வின் ஆவணப்படங்களுக்கு ஐ.நா மன்றம் கூறும் தீர்ப்பு என்னவாக இருக்கப்போகின்றது என்பது இலங்கை அரசிற்கு பெரும் தலையிடியினைக் கொடுக்கப்போகின்றது என்பதுதான் உண்மையான விடயம்.

சுழியோடி

# ஜெனீவா தீர்மானங்களும் அரசியல்வாதிகளின் மாறுபட்ட கருத்துக்களும்

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான கடந்த கால பேச்சுவார்த்தைகளை உற்றுநோக்கும் போது அவை அனைத்துமே எந்தவித சாதகத்தன்மையாக அமையாதபோதிலும் இனி நடக்கப்போகும் பேச்சுக்கள் சாதகமாக அமையும் என்று கூறுமுடியாது. ஆனால் மனிதநேயம் கொண்ட நாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை பெற்றுக்கொடுக்கவேண்டும் என செயற்பட்டுவருகின்றனர்.

காணாமற்போனோர் தொடர்பிலும் காணிகள் அபகரிக்கப்பட்டமை தொடர்பிலும் தமிழ்மக்களுக்கான ஒரு தீர்வுத் திட்டத்தினை உரிய முறையில் வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மாகாணசபையிலும், பாராளுமன்றத்திலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் இலங்கையரசு ஜெனிவாத் தீர்மானத்தின் போது எடுத்துக்கூறியிருக்கின்றது.

இனப்படுகொலை என்கின்ற விடயத்தை அங்கு முன்வைக்கவோ அதனை தகுந்த முறையில் எடுத்துச்சொல்லவோ சந்தர்ப்பங்கள் இல்லாமல் போயுள்ளது. தற்பொழுது பல அரசியல் ஆய்வாளர்களாலும் எதிர்பார்க்கப்பட்ட விடயமாக மேற்குலக நாடுகள் தமது சொந்த காரணங்களை முன்வைக்கும் அடிப்படையிலேயே நடந்துகொள்வதாகவும் தமது அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் நோக்கிலேயே செயற்படுவதாகவும் கூறியிருக்கின்றன.

அரசியல் என்பது கருத்துக்கள் கூறுவதிலும், அதனை சரிவர செயற்படுத்துவதிலும், அரசியல் வாதிகள் ஒருவரை ஒருவர் மோதிக்கொள்வதும் அரசியல் பயணத்தின் ஒரு பகுதியாகும். மக்களை எல்லாவற்றிற்கும் கேடயமாக வைத்து இவ்வரசியல் வாதிகள் செயற்பட்டுவருகின்றனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்களினுடைய ஒருசிலரது கருத்துக்களும் தமிழ்மக்களுடைய அரசியல் பயணத்திற்கு முட்டுக்கட்டையாக அமைகின்றது. தமிழ் மக்களினது ஒற்றுமை நிலைநிறுத்தப்படவேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பலம் அதிகரிக்கப்படவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.

ஜெனிவா சென்று சுய விருப்பங்களுக்காக தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளக்கூடாது. காரணம் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் போராட்டத்தின் வழியேவந்தவர்கள். அதனுடைய வலியைபுரிந்து கொள்ளவேண்டும். நம் நாட்டில் நடைபெற்றது இனச்சுத்திகரிப்பே. அதற்காக எத்தனையோ உயிர்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளது. இதனை மனதில் வைத்துக்கொண்டு எம் தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமையாக செயற்படவேண்டும். இவ் ஜெனிவா மகாநாடு தொடர்பில் அரசியல்வாதிகளின் கருத்துக்களை உற்றுநோக்குவோமாக விருந்தால் ஏதோ ஒரு வகையில் குழப்பமான கருத்துக்களாகவே அமைகின்றது. அந்தவகையில் சில கருத்துக்களை பாரக்கின்றபொழுது,

இலங்கையில் போர்க்குற்றங்கள் குறித்துவிசாரணைசெய்யப்படவேண்டும் என்று தீர்மானிக்கும் அதிகாரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஹம்பகாவில் நடந்த தேர்தல் பேரணி ஒன்றில் உரையாற்றிய அவர், "எந்த அனைத்துலக சவாலையும் எதிர்கொள்ளும் வலிமை இலங்கைக்கு உள்ளது. ஏகாதிபத்தியவாதிகளுக்கோ அவர்களின் அடிவருடிகளுக்கோ நாம் அடிபணியமாட்டோம். இந்த நாட்டின் மக்களுக்கு மட்டுமே, அரசாங்கத்தை மாற்றுகின்ற அதிகாரம் உள்ளது. மக்களின் ஆதரவு இல்லாமல், ஐ.நாவில் உள்ள எந்தவொரு வெளிநாட்டு சக்தியாலும். அரசாங்கத்தை அகற்ற முடியாது.

மக்களின் முன்பாக எமது தலைகளை குனிந்து கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். ஆனால், ஏகாதிபத்தியவாதிகளின் முன்பாகவோ, கடின முயற்சியின் மூலம் பெறப்பட்ட அமைதியையும், சுதந்திரத்தையும் காட்டிக் கொடுத்த அவர்களின் அடிவருடிகள் முன்பாகவோ நாம் தலைவணங்கமாட்டோம். மக்களின் தீர்ப்பின் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. நாட்டில் உள்ள எல்லா மக்களும் பயனடையத்தக்கவகையில், பாரிய அபிவிருத்திப் பணிகளை முறைப்படியாக மேற்கொண்டுள்ளோம்.

பலவந்தமாக கடத்தி காணாமற்போகச் செய்தலை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக நடைமுறைப்படுத்துதல்என்றவிடயத்தை தண்டனைச் சட்டக் கோவையில்



உள்ளடக்குமாறு வலியுறுத்துவதாக இந்தப் பிரேரணை அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், யுத்தக் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றினை வலியுறுத்துவதாக இந்தப் பிரேரணை அமைவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. உள்நாட்டில் விசாரணைப் பொறிமுறை ஒன்றினை அமைத்து உண்மைகள் கண்டறியப்படவேண்டும் என்று கடந்த ஆண்டு அமெரிக்கத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், நம்பகத்தன்மை வாய்ந்ததாக இந்த உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை அமையவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்றன. எனவே சர்வதேசப் பொறிமுறை ஒன்று அவசியம் என்று வலியுறுத்தப்படலாம் என்று இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் கொண்டு வரப்படுகின்ற இலங்கை தொடர்பான தீர்மானம் சர்வதேச விசாரணையைக் கோருவதையே நோக்காகக் கொண்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணை என்கின்ற சொற்பதம் அந்தப் பிரேரணையின் முன்வரைவில் இல்லை என்பதற்காக, அதனை பொறுப்பற்ற முறையில்எதிர்க்க முடியாது. ஜெனீவா பிரேரணையின் முன்வரைவில் அடங்கியுள்ள விசாரணை கோரிக்கைகள் தமிழர்களின் பிரச்சனையை தீர்ப்பதை நோக்காகக் கொண்டது. அந்த நோக்கத்தை அடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. அதேநேரம், தமிழ் மக்களுக்குத் தேவையான அரசியல் தீர்வு, வடக்கு கிழக்கில் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீட்டல் போன்ற விடயங்களை எட்டக்கூடிய விதத்தில் இந்தத் தீர்மானத்தில்ஏற்பாடுகள்உள்ளடக்கப்படவேண்டும். இலங்கையில் உள்ளக விசாரணை நடைபெறவேண்டும் என்றும் அதனை ஐ.நா மனித உரிமைகள் பேரவை கண்காணிக்க வேண்டும் என்ற ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, 'மனித உரிமைகள் உயர் ஆணையர் தனியான விசாரணை நடத்தவேண்டும்' என்று தீர்மானத்தின் முன்வரைவு கூறுகின்றது.

ஐநா மனித உரிமைகள் உயர் ஆணையர் நடத்துகின்ற விசாரணை, சர்வதேச விசாரணையாகவே இருக்க முடியும். சர்வதேச விசாரணை என்ற சொற்பதம் இல்லை என்பதற்காக அதனை நாங்கள் எதிர்க்க முடியாது. மக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் மிகவும் நிதானமாக, அவதானமாக, பக்குவமாக நடந்து கொள்ள வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கு இருக்கிறது. அமெரிக்கத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் எதிர்க்கிறது, நாங்களும் அதனை எதிர்த்தால் சர்வதேச சமூகம் தமிழர் பிரச்சனையை இலகுவாக கைகழுவி விட்டுவிடும் வூாய்ப்பிருக்கிறது' என்று கூறினார் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வினைவிட அபிவிருத்திபே முக்கியம் என்று பிதற்றியுள்ள வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் "ஜெனீவா தொடர்பாக ஊடகவியலார்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு ஜெனீவா தொடர்பாக எதுவும் பேச முடியாது என்று மழுப்பிக் கொண்டு ஊடகவியலாளர் மத்தியில் இருந்து விலகியும் சென்றுள்ளார்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மருத்துவம் மற்றும் நிர்வாக ரீதியான உதவிகள், வேலைத்திட்டங்கள் என்பனவற்றினை முன்னெடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார். இவ்வாறான உதவிகளை ஜப்பான் நாட்டு அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு முக்கியம் தேவை அபிவிருத்தியே தவிர அரசியல் தீர்வு இல்லை.

அமெரிக்காவின் பிரேரணை முன்வரைபை வரவேற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி, தலைவர் இரா. சம்பந்தனும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். 'அமெரிக்கத் தீர்மானம் ஏமாற்றிவிட்டது' என்று கடந்த வாரம் சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட சில தலைவர்கள் கூறியிருந்தனர்.

இலங்கையில் உள்ளக விசாரணை நடைபெறவேண்டும் என்றும் அதனை ஐநா மனித உரிமைகள் பேரவை கண்காணிக்க வேண்டும் என்ற ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, 'மனித உரிமைகள் உயர் ஆணையர் தனியான விசாரணை நடத்தவேண்டும்' என்று தீர்மானத்தின் முன்வரைவு கூறுகின்றமையை சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கத் தீர்மானம் தமிழர்களை ஏமாற்றிவிட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனும் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணையொன்று வரும் என்று எதிர்பார்த்திருந்த தமிழ் மக்கள் இன்று ஏமாற்றமடைந்து நிற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வைத்துள்ள தீர்மானம் பெரிய அழுத்தங்களை வழங்கவில்லை. குறித்த தீர்மானத்தில் அரசியல் கைதிகள், சரணடைந்தவர்கள் மற்றும் இன அழிப்புத் தொடர்பாக எதுவுமே குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. இன அழிப்பிற்கு சர்வதேசம் நீதியான தீர்வொன்றினை தராத பட்சத்தில், எமது இளம் சமூகம் மாற்றுவழிகளை தேடிக்கொள்ளுமானால் அஹிம்சை பேசிக்கொண்டிருக்கும் சர்வதேச நாடுகளே அதற்கு பொறுப்பாக வேண்டியிருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஜெனீவா கூட்டத் தொடரில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் அங்கு இராஜதந்திரிகளுடன் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக எதுவுமே பேசியிருக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிய அனந்தி சசிதரன், தன்னை முன்னாள் போராளியொருவரின் மனைவி என்கிற காரணத்தினால் பேசவே அனுமதிக்கவில்லை என்றார்.


இவ்வாறு இலங்கையின் பல அரசி யல்வாதிகள். ஒரு சாரார் விசாரணை தேவை என்றும் இன்னொரு சாரார் விசாரணை தேவையில்லை என்றும் கூறிவருகின்றனர். மற்றுமொரு ஆயுதப் போரினை அமெரிக்க அரசு விதைக்கின்றது என்றே கூறவேண்டும். வட மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்த கருத்தின்படி சர்வதேச நாடுகள் மற்றும் ஐ.நாவின் நேரடி தலையீடு இன்றி ஈழத்தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண இயலாது என அவர் கூறினார். போர் குற்றங்கள் குறித்து விசாரணை செய்ய 5 ஆண்டுகள் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இலங்கை அரசு தமிழர்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை அரசு மீது நம்பிக்கை இழந்துள்ள நிலையில் தமிழ் சமூகம் ஐ.நா.வின் உதவியை பெரிதும் நம்பி இருப்பதாகவும், நில அபகரிப்பு, சிங்களவர் குடியேற்றம், இராணுவ அத்துமீறல், மனித உரிமை மீறல் உள்ளிட்ட செயல்களில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. எந்த அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி சுயநலம் கருதாமல் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டால் அது நன்மை பயக்கும் விடயமாக அமையும்.

மறவன்

ஜெனிவா தீர்மானங்கள் முதல் வரையில் இலங்கைக்கெதிரான பல தீர்மானங்களை எடுத்துரைத்துள்ளது இந்த வரைபுத் தீர்மானம் இன்னும் மாற்றப்படலாம். எப்பொழுது மாற்றப்படும் என்பது நமக்கு தெரியாது. இது தமிழ் மக்களை திருப்திப்படுத்தக்கூடிய தீர்மானம் அல்ல அடுத்து சர்வதேச சமூகத்தினூடாகச் செல்கின்ற போது அதனுடைய செயற்பாடுகள் மெதுவாகத்தான் நகர்ந்து செல்லும். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி. நவநீதம்பிள்ளை உட்பட சர்வதேச நாடுகள் பலதும் சர்வதேச விசாரணை வேண்டுமென்றே கூறி நிற்கின்றன.

இத்தீர்மானம் என்பது முழு இலங்கையிலும் ஒரு ஜனநாயகத்தை ஏற்படுத்தும் வகையிலான ஒரு தீர்மானம். அதாவது இலங்கையில் எப்பாகத்திலும் கொலை செய்யப்பட்டால் 13ஆம் திருத்தச் சட்டத்தின்படி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்றெ கூறப்பட்டுள்ளது அது மட்டுமல்லாது வடமாகணசபை இயங்குவதுடன் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது காணிகளை மீள வும் கையளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மட்டுமன்றி இராணுவம் தொடர்ந்து காணிகளை அபகரிக்க செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்கு குழுவொன்றை நியமித்து அதனூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய விருப்பம்.



நான் இந்த விடயமாக காலை (07.03.2014) அமெரிக்கத் தூதுவராலயத்தில் இருக்ககூடிய அரசியல் வாதிகளுடன் கலந்துரையாடினேன். இது தொடர்பாக பிரித்தானிய தூதுவர் அலுவலகத்திற்கும் கூற இருக்கின்றோம். டில்லிக்குச் சென்றால் இந்தியாவுக்கும் இது தொடர்பாக ஒரு விளக்கம் கொடுக்க இருக்கின்றோம். ஆகவே ஒரு அரசியல் தீர்வை நோக்கி போகின்ற போது பாராளுமன்ற தெரிவுக் குழு வினை வைத்து எல்லோரும் ஏமாற்றும் செயல் திட்டத்தினையே அரசாங்கம் செய்து வருகின்றது.


தேவை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ் அறிக்கையானது அரசாங்கத்தை காப்பாற்றவும் ஜனாதிபதியைக் காப்பாற்றவும் மந்திரித்து விடப்பட்டதென்றே கூறவேண்டும். இருப்பினும் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கைக்கு விஜயம் செய்த போது இலங்கையிலிருந்து திரட்டப்பட்ட போர்குற்றங்கள் தொடர்பிலான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது அதனை இலங்கை அரசு நிராகரித்தது.

இருப்பினும் கூட சர்வதேசத்தின் மத்தியஸ்தம் என்பது ஒரு நீண்ட தூர அவகாசத்தின் பின்னே வழங்கப்படும் என்று கூறப்படுகிறது சுமந்திரனுடைய கருத்துக்களைப் பார்க்கும் போது தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு மட்டுமல்ல ஏனையவர்களுக்கும் அவர் என்ன கருத்தை கூறுகிறார் என்பது தெரியாமல் உள்ளது. சம்மந்தன் அவர்களுக்கும், மா.வை சேனாதிராஜா அவர்களுக்கும் சமந்திரன் கூறும் கருத்துக்கள் அவர்களுக்கே


கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்ற வகையில் பல ஊடகங்களும் நீங்கள் கேட்ட இதே கேள்வியைத் கேட்டிருந்தன.

அவர்கள் இது தொடர்பில் என்னிடம் எதையுமே பேசவில்லை என்பதுதான் கவலைக்குரிய விடயம். இவ்விடயங்கள் தமிழ் தேசியக்



கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியை சார்ந்தவர்கள்

# பாராளுமன்ற தெரிவுக்குழு எனக் கூறி அரசு ஏமாற்றுகிறது - சுரேஷ் பிரேமச்சந்திரன்



அவர்களுக்குரிய அதிகாரங்கள் வழங்குவது மட்டுமன்றி நீதித்துறைக்கும் அதனுடைய அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கூறப்படுகிறது. இதில் பல்வேறுபட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழும் மக்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்குமென்றல்ல இதற்கு இன்னும் ஒரு வருடகாலம் நீடிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு மாற்று வழி இல்லை (அஹிம்சை, ஆயுதம்) இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்தை என்பது 2012 உடன் முடிவடைந்து விட்டது. இலங்கை அரசினருடனான பேச்சுவார்தை இனியும் நல்லதொரு முடிவைக் கொண்டு வருமென்றுமில்லை.

இருப்பினும்சர்வதேசத்தினூடாகதமிழ் மக்களினதும், அரசாங்கத்தினதும் புரிந்துணர்வு செயற்பாடுகள் நன்றாக அமைய வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்கின்றோம். இதனூடாக அரசாங்கத்தினால்

பேச்சுவார்தை ஒன்று இல்லையென்றால் இலங்கை அரசு தன்னுடைய நிகழ்ச்சி நிரலை வேறு விதமாக மாற்றி அமைக்கிறது. பாராளுமன்ற தேர்வுக்குழுவினூடாகவும் நாம் ஒருசில விடயங்களில் கரிசனையாக இருக்கின்றோம். ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் கொடுத்த அறிக்கையானது ஒரு பிழை யான அறிக்கை. முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் புதைத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

போர்க் குற்றங்கள் தொடர்பாகவும், புதைகுழிகள் தொடர்பாகவும் தாம் விசாரித்து வருவதா கவும் அதற்காக தாம் ஒரு குழுவை நியமித்துள்ளதாகவும், தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்வதற்கு ஒரு வருட கால அவகாசம் இன்னும்

தெரியாதென்றால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய பிரதிநிதிகளுக்கு எவ்வாறு விடயங்களைத் தெரிந்து கொள்வது.

ஆகவே இது ஒரு தவறான முறை இவ்வாறான நிலைமைகள் இருக்கின்ற போது தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மத்தியிலும் ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

இது மட்டுமன்றி வடக்குமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் அவர்களை ஜெனிவாவிற்கு அழைத்துச் சென்று அவரைபேசவிடாது தடுத்ததும், நமக்குதான்எல்லாம்தெரியும்என்றுசுமந்திரன் நடந்து கொள்வது ஒரு அநாகரிகமான செயலாகும். அவ்வாறில்லையேல் அனந்தி அவர்களை ஜெனிவாவிற்கு கூட்டிக்கொண்டு செல்லாது விட்டிருக்கலாம். அவர் உண்மையில் யுத்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி. அவருடைய கணவரையும் அவர் யுத்தத்தினால் இழந்திருக்கிறார். இவ்வாறான நிகழ்வானது சுமந்திரன் தழிழ் மக்களது பிரச்சனைகளை வேறுவிதமாக கையாளுகிறாரா என்று தோன்றுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் வெளிநாட்டு அலுவல்களை மேற்கொள்ள ஒரு குழுவை அமைக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன். சம்மந்தனும், சுமந்திரனும் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பது தவறான விடயமாகும். இதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற தெரிவுக் குழுக்கூட்டங்களின் போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவர்கள் இது தொடர்பாக கூறியிருந்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்ற வகையில் என்னிடம் இந்த விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கவில்லை. ஊடகங்களுக்கு தெரிவிக்குமாறு கூறவும் இல்லை. ஆனால் தமிழ் தேசியக்

தங்களுடைய வசதிக்கேற்ற முடிவுகளை எடுத்துள்ளார்கள். இது தமிழ் மக்களை ஏமாற்றம் விடயமுமாகும்.

இவ்வாறு ஏன் அவர்கள் செயற்படுகின்றார்கள் என்று பார்க்கும்போது ஏன் இவ்வாறு செய்தார்கள் என்பதற்கு அப்பால் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒரு பலமான கட்சியாக மாற்றும் நோக்கம் இவர்களுக்கு இல்லை. தமிழரசுக்கட்சிதான் எல்லாவற்றையும் செய்கிறார்கள் என்பதைக் காட்டும் ஒரு செயற்பாடு. ஆனால் தமிழரசுக்கட் சிக் களுக் குள் ளேயே தெரியாமல் செயற்படுவதென்பது அடுத்த பிரச்சினை. அதனை சுமந்திரன் தான் இந்த வெளிநாட்டு விவகாரங்களைச் செய்யமுடியும் என்ற பாணியில் செயற்படுகின்றார் எனலாம்.

அவருடைய பத்திரிகை செய்திகளை பார்க்கின்ற போது எனக்கு அவ்வாறுதான் புரிகின்றது. ஆனால் இது ஒரு தவறான விடயம். இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு சம்மந்தனும் சுமந்திரனுமே தமிழ் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும்.

பெரும்பாலான அரசியல் ஆய்வாரள்களின் கருத்தின்படி தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள்ளும், வடமாகாணசபை அமைச்சுக்குள்ளும் அரசாங்கம் திட்டமிட்டு குழப்பநிலைமையை உருவாக்கி உலகநாடுகளுக்கு இவர்கள் ஒற்றுமையில்லை என்பதை எடுத்துக்காட்டும் ஒரு செயலாக இருக்கின்றதா என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் இறுதியாக கேட்தற்கு இதற்கான மறுமொழியை என்னால் கூறமுடியாது. ஆனால் நடக்கின்ற விடயங்கள் ஆரோக்கியமானதாக இல்லை என்று மட்டும் கூற முடியும் என்று தெரிவித்தார்.

# பிராந்தியச் செய்திகள்

## மலைநாட்டில் நீர்த்தேக்கங்களின் மட்டம் குறைகிறது




காசல்ட்ரி நீர்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளது. மத்திய மலைநாட்டில் அதிகளவு வெப்பம் நிலவி வருவதால் நீர்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளது.

இதனால் சட்டவிரோதமான மாணிக்க கல் அகழ்வுகள் ஹட்டன் நோட்டன் பிரிவின் பிரதான வீதியின் அருகேயும் சமுத்திரவல்லி தோட்டம் மற்றும் டங்கல் தோட்டத்திலும் இவ்வாறான சட்டவிரோதமான மாணிக்ககல் அகழ்வுகள் இரவு நேரங்களில் இடம்பெறுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இப்பகுதி ஹட்டன் நோவுட் பொலிஸாருக்கு உரித்தானது. நீர்தேக்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகளும் கடற்படை அதிகரிகளும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தகவல்:- செ.தி.பெருமாள்
மஸ்கெலிய நிருபர்

## வவுனியா கருமாரி அம்மன் ஆலயத்தின் மரக்கறித் திருவிழா



வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தின் நான்காம் திருவிழாவான சுமங்கலித் திருவிழாவின் போது, மரக்கறிகள், பழங்கள் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்டு கருமாரி அம்மன் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

நேற்று முனதினம் பிரபா கரக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் ஒன்றினைந்து இவ்விசேட பூஜைகளை நடத்தினர். தொடர்தும் 12 நாள் திருவிழா நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்று வருவதுடன் கலைகளை வழக்கும் நோக்கில் இந்து சமய நாட்டிய நடனங்களும் இடம்பெற்று வருகிறது.

## கடத்தப்பட்ட ஆசிரியர் எலும்புக்கூடாக மீட்பு




வன்னியின் மாங்குளம் பகுதியினில் A 9 வீதி ஓரமாகவுள்ள காணியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு கடந்த ஆண்டினில் காணாமல் போயிருந்த ஆசிரியர் கார்த்திகேசு நிருபன்-வயது 36 என்பவருடையதாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டின் நவம்பர் மாதமளவில் அவர் வெள்ளை வான் கும்பலால் கடத்தப்பட்டிருந்ததாகக் குடும்பத்தவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியைச் சொந்த இடமாக சேர்ந்த நிருபன் வன்னியில் நீண்டகாலமாக கற்பித்து வந்திருந்ததாகவும் பின்னர் வவுனியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்குள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்பித்து வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. திருமண வாழ்வினை உதறித்தள்ளியிருந்த அவர் யுத்த பாதிப்பிற்குள்ளான வன்னி மாணவர்களது நலன்களில் கூடிய அக்கறை செலுத்தியும் வந்துள்ளார்.

உடல் சிதைவடைந்த நிலை யில் அவரது எலும்புக்கூடு புதன்கிழமை (12) மீட்கப்பட்டிருந்தது. இவ் எலும்புக் கூட்டுக்கு அருகில் கையடக்கத் தொலைபேசியொன்றும், குளிர்பானப்போத்தல் மற்றும் மோட்டார் சைக்கிள் திறப்பு ஆகியன கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணியொன்றினைத் துப்பரவாக்கும் பணியில் புதன்கிழமை (12) ஈடுபட்டவேளையிலே மேற்படி எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்படடுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவனொருவனும் மாவீரர் தின பாடல்களை ஒலிக்கவிட்ட பின்னணியில் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆவாக்குழுவின் தலைவரின் விளக்கமறியல் நீடிப்பு




யாழ்.குடாநாட்டில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட ஆவாக் குழுவின் தலைவரைத் தொடர்ந்தும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்திருக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட ஆவாக் குழுவினரின் தலைவர் தவிர்ந்த ஏனையவர்களை கடந்த தவணைகளில் நீதிமன்றம் பிணையில் விடிவிப்புச் செய்திருந்தது.

இந்நிலையில் இன்று இவ்வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது அக்குழுவின் தலைவர் எனச் சந்தேகிக்கப்படுகின்ற ஆவாவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. இதேவேளை இக்குழுவுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த கிழமையும் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர். இக்குழுவினருடைய சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் சட்டவிரோதமாக குடியேற்றங்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தில் முறைகேடான முறையில் முஸ்லிம் மக்களுக்கு மட்டும் காணிகளை வழங்கும் நடவடிக்கையினை மீளவும் ஆரம்பிப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

மேற்படி மாவட்டத்தின் நீராவிப்பிட்டி, ஹிக்கிராபுரம் உள்ளிட்ட கிராமங்களில் இவ் வருடத்தின் ஆ ரம்பத்தில் முறைகேடான முறையில் முஸ்லிம் மக்களுக்கு மட்டும் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில் விடயம் வடமாகாணசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு மேற்படி திட்டம் ஒரு பொது வேலைத்திட்டமாக மேற்கொள்ளப்படவேண்டும், மாவட்டத்திலுள்ள காணி இல்லாத சகல மக்களையும் கருத்தில் கொள்ளவேண்டும் எனவும் கேட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 11ம் திகதி நீராவிப்பிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற காணி வழங்கல் தொடர்பான கலந்துரையாடலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் உனைஸ் பாறுக், வடமாகாணசபை உறுப்பினர் ஜெனோபர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு காணிகளை மீள வழங்குவதற்கு முஸ்லிம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி திட்டத்தில் மிக மோசமான முறைகேடுகள் இடம்பெற்றிருந்தமையினால் அரசாங்கத்தினால் மேற்படி திட்டம் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலும், பிரதேச செயலர் தன்னுடைய பதவியை காப்பாற்றிக் கொடுத்த அமைச்சர் ரிசாத் பதியூதினுக்காக, மேற்படி திட்டத்தை மீளவும் மாற்று வடிவத்தில் நடைமுறைப்படுத்த நினைப்பதாக மக்கள் குற்றம் சுட்டியியுள்ளனர்.

மேலும் இது தொடர்பான காணிகச்சேரி எதிர்வரும் 27.03.2014 நடைபெறுமென பாராளமன்ற உறுப்பினர் உனைஸ் பாறுக் அவர்களால் கலந்துரையாடலில் அறிவிக்கப்பட்டுள்ளது. அரச உள்நாட்டு பொதுநிர்வாக அமைச்சின் நிர்வாக சேவை உத்தியோகத்தர் திரேஸ்குமார் இவ்வாறு அரசியல் கட்சிக்காக கைக்கூலியாக செயல்படுவது சட்டவிரோதமான செயலாகும். என மக்கள் குற்றம்சாட்டியிருக்கின்றனர்.

## மன்னாரில் குவியும் கொக்குகள்



மன்னார் நகரில் அதிகரித்துள்ள நூற்றுக் கணக்கான வெள்ளைக் கொக்குகள் மாவட்டச் செயலக வளாகத்திலுள்ள மரங்களில் தங்கியிருப்பதுடன், மாவட்டச் செயலக கட்டிடங்கள் மற்றும் வீதியில் மலம் கழித்து அசிங்கப்படுத்துவதாக மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இதனால் இங்கு துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார். கடந்த 30 வருடகால யுத்தம் காரணமாக காடுகளிலும் ஓடைகளிலும் சதுப்பு நிலங்களிலும் வாழ்ந்துவந்த மேற்படி வெள்ளைக் கொக்குகள், இடம்பெயர்ந்து மன்னார் மாவட்டத்திற்கு அடைக்கலம் தேடி வந்த நிலையில் தற்போது இவை பல்கிப்பெருகியுள்ளன.

மேற்படி கொக்குகள் மன்னார் மாவட்டச் செயலக வளாகம், அங்குள்ள மரங்கள், சிறிய குளங்கள், ஓடைகள் ஆகியவற்றில் வாழ்ந்துவருவதாகவும் அவர் கூறினார்.

மேலும், இது தொடர்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம். வை.எஸ்.தேசப்பிரியவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் அவர் அனுமதியளித்தால் மாவட்டச் செயலக வளாகத்திலுள்ள மரங்களை வெட்டி கொக்குகளை வெளியேற்ற முடியுமெனவும் அவர் கூறினார்.

## வடக்கில் அதிகரித்துள்ள தொழுநோயாளர் தொகை



தொழு நோயாளர் எண்ணிக்கை வடக்கில் அதிகரித்திருப்பதாக மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 2013 இல் யாழ். மாவட்டத்தில் 53 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.


இதே சமயம் வட மாகாணம் முழுவதிலும் கடந்த ஆண்டில் 79 பேர் இந்நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

தொழு நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு சமூகத்தில் அந்நோய் பற்றிய விழிப்புணர்வின்மையே காரணம் என்கிறார் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் திருமதி டாக்டர் எஸ்.ஆர். யூட் இந்த நோயை குணமாக்க முடியாது என மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நோய் அடையாளம் தெரிந்தும் கூட சிகிச்சை மேற்கொள்ள அவர்கள் சிரத்தை காட்டுவதில்லை. இந்த நோயைக் குணமாக்க முடியும்.

நோய் பற்றி அவதானித்த உடனேயே மக்கள் சிகிச்சைக்கு வருவது அவசியம். மாகாணத்தில் அனைத்தது மாவட்டங்களிலும் உடற்பரிசோதனைகள் நடத்துவதுடன் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரத்தையும் முன்னெடுத்து வருகிறோம்.

தோல் நோய்ச் சிகிச்சைக்கான நிபுணர்களுக்கு எங்கள் மாகாணத்தில் பற்றாக்குறை நிலவுகின்றது. எனினும் அந்தப் பிரச்சினையை நாம் எப்படியும் சமாளித்துக் கொள்வோம். என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் 2011 இல் 52 பேரும், 2012 இல் 62 பேரும், 2013 இல் 79 பேரும்இந்த நோயால் பீடிக்கப்பட்டனர் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




## புதுப்பொலிவுடன் மீண்டும் ஆயிரத்தில் ஒருவன்



புகழ்பெற்ற பழம்பெரும் நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் வாழ்க்கையில் 1965ல் ஆயிரத்தில் ஒருவன் ஒரு முக்கிய படமாக வெளிவந்தது. இந்த படத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா கதாநாயகியாக நடித்திருந்தார்.

இவர்களுடன் எம்.என். நம்பியார், நாகேஷ், ஆர்.எஸ். மனோஹர் உள்ளிட்டோர் நடித்திருந்தினர். இந்த படத்தில் விஸ்வநாத ராமமூர்த்தி இசையமைத்த பாடல்கள் இன்னும் பிரபலமாக இருக்கிறது. தற்போது உள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களால் ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் புதுப்பிக்கப்பட்டு மறு வெளியீட்டில் வெள்ளிக்கிழமை மார்ச் 14 அன்று திரைக்குவரவுள்ளது.

சமீபத்தில் வெளிவந்த சிவாஜி கணேசனின் கர்ணன் படம் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றது. அதே போல் இப்படத்திற்கும் நல்ல வரவேற்பு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## சௌந்தர்யாவை பாராட்டிய சிம்பு



கோச்சடையான் படத்தின் டிரைலர் யூடியூபில் வெளியிடப்பட்டு மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இந்திய திரைப்பட வரலாற்றில் முதன் முறையாக மோஷன் கேப்சர் தொழில்நுட்பத்தில் வெளிவந்த கோச்சடையான் திரைப்படத்தின் டிரைலர் உற்சாகமான விமர்சனங்களை பெற்றுள்ளது. சௌந்தர்யாவின் டிவிட்டர் பக்கத்தில் திரையுலகினர் வாழ்த்துக்களையும், அவர்களது கடின முயற்சிக்கு பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

சிம்பு ஆர்வமுடன் கோச்சடையான் விஷ்வல் மற்றும் டிரெய்லரை பார்த்துவிட்டு Thalaivar is back என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், லதா ரஜினிகாந்த் பாடிய பாடலுக்கு பாராட்டுகளையும் சௌந்தர்யாவின் டிவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார் சிம்பு.

## மார்ச் 28இல் இனம் படம் வெளியீடு



சினிமா ஒளிப்பதிவாளரும், இயக்குனருமான சந்தோஷ் சிவன், “இனம்“ என்ற படத்தை இயக்கி, தயாரித்துள்ளார். இலங்கையை களமாகக் கொண்டு உருவாக்கியுள்ள இந்த படம் மார்ச் 28ம் திகதி திரைக்குவரவுள்ளது. லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் வெளியிடும் இந்த படம் இலங்கையின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நான்கு இளைஞர்கள் பற்றி எடுக்கப்பட்டதாகும்.

இதில் சரிதா, ஜானகி, கருணாஸ், எம்.கே.விஜயன், ஷியாம் சுந்தர் உட்பட பலர் நடித்திருக்கிறார்கள். இப்படத்தின் படப்பிடிப்புகள் மகாராஷ்டிரா, கேரளா, திருநெல்வேலி, இலங்கை உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

இப்படம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தயாராகிறது. ஆங்கிலத்தில் சிலோன் என்ற பெயரிலும் தமிழில் இனம் என்ற பெயரிலும் வெளிவர உள்ளது.

## நம்மாழ்வாரின் வாழ்க்கை திரைப்படமாகிறது




சமுத்திரக்கனி இயக்கிய நிமிர்ந்து நில் படம் பல பிரச்சினைகளுக்கு பிறகு திகதி வெளியிடப்பட்டது. ஜெயம் ரவி, அமலா பால் நடித்திருக்கும் இப்படத்திற்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்தப் படத்திற்கு பிறகு சமுத்திரக்கனி தன்னுடைய அடுத்த படத்திற்கு தயாராகியுள்ளார்.

இந்திய இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார், தம் வாழ்நாள் முழுவதும் இயற்கைக்காக பெரும் பாடுபட்டவர். இவரால் ஈர்க்கப்பட்ட சமுத்திரக்கனி இனிவரும் இளைய தலைமுறைகளுக்கு பயன்படும் வகையில் இயற்கை வேளாண்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுவதற்காக ஒரு படம் எடுக்கவுள்ளார்.

இதற்காக சமுத்திரக்கனி நம்மாழ்வாரின் வாழ்க்கை மற்றும் போதனைகளை பற்றி சேகரிக்க தொடங்கியுள்ளார். இந்த படத்தில் சரத்குமார் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக பேசப்பட்டு வருகிறது.

## இறுதி கட்டத்தில் இராமானுஜம் படம்



கணித மேதை ராமானுஜத்தின் வாழ்க்கை வரலாற்றை கூறும் படம் ராமானுஜம். இப்படம் தமிழ், தெலுங்கு என இறு மொழிகளிலும் தயாரிக்கப்படுகிறது. மோகமுள், முகம், பாரதி படங்களை இயக்கிய ஞானராஜசேகரன் இப்படத்தை இயக்குகிறார். பழம்பெரும் நடிகை சாவித்ரியின் பேரன் அபிநய், ராமானுஜம் வேடத்தில் நடிக்கிறார். சுஹாசினி மனிரத்னம் ராமானுஜத்தின் அன்னையாகவும், பாமா ராமானுஜத்தின் மனையியாக நடிக்கிறார்.

துனை கதாபாத்திரத்தில் நிழல்கள் ரவி, ஒய். ஜி. மகேந்திரன், ராதா ரவி, சரத்பாபு, அப்பாஸ், டெல்லி கணேஷ், மனோபாலா மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படத்தின் படப்பிடிப்பு இறுதி கட்டத்தில் உள்ளது. ரமேஷ் வினாயகம் இசையமைக்க, சன்னி ஜோசப் ஒளிப்பதிவு செய்கிறார். இந்த படத்தினை ஸ்ரீவத்சன், சுஷாந்த், சரண்யா ஆகியோர் தயாரிக்கின்றனர்

## மனிஷா யாதவை நீக்கியது ஏன்?



இடம் பொருள் ஏவல் படத்தில் இருந்து மனிஷா யாதவை நீக்கியது ஏன் என்பது குறித்து சீனு ராமசாமி விளக்கமளித்துள்ளார். விஜய் சேதுபதியை வைத்து இடம் பொருள் ஏவல் படத்தை சீனு ராமசாமி இயக்குகிறார். இதில் மனிஷா யாதவ் நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டு பிறகு நீக்கப்பட்டார்.

இதனால் மனிஷா யாதவ் நடிகர் சங்கத்தில் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து சீனு ராமசாமி கூறுகையில், இடம் பொருள் ஏவல் படம் மலை கிராமத்து கதை. மனிஷா யாதவுக்கு மேக்கப் போட்டபின் முகத்தில் கிராமத்து பெண் சாயல் வரவில்லை.

கடும் முயற்சி எடுத்தும் தோற்றத்தை மாற்ற முடியவில்லை. பட்டணத்து பெண் போலவே தெரிந்தார். எனவேதான் அவரை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. விஷ்ணு ஜோடியாக இன்னொரு கேரக்டரில் நடிக்கும்படி கேட்டுள்ளோம். இன்னும் அவர் பதில் சொல்லவில்லை என்று கூறியுள்ளார்.

## வடிவேலு படம் வெளியிடும் தியேட்டர்களுக்கு எச்சரிக்கை



காமெடி புயல் வடிவேலு சில அரசியல் பிரச்சாரங்களில் ஈடுபட்டு பிரச்சனையில் இருந்தார். அதனால் சினிமா வாழ்க்கையை இரண்டு வருடங்களாக நிறுத்தி வைத்திருந்தார்.


இப்போது மறுபடியும் ஜகஜ்ஜால புஜபல தெனாலிராமன் என்ற சரித்திர காமெடி படத்தில் நடித்திருக்கிறார். அந்தப் படங்களில் வடிவேலுவின் முகபாவங்களைப் பார்க்கும் போதே சிரிப்பு தானாக வருகிறது.

இந்நிலையில் தற்போது படப்பிடிப்பை முடித்து விட்டு இறுதிகட்ட பணிகளில் பிசியாகியுள்ளனர். படத்தை சித்திரை மாதம் வெளியிடப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, கோடை விடுமுறையில் கோச்சடையான், விஸ்வரூபம்-2, நான் சிகப்பு மனிதன், மான்கராத்தே போன்ற மெகா படங்களும் திரைக்கு வருவதால், வடிவேலு படத்துக்காகவும் தியேட்டர்களை கைப்பற்றும் வேலைகள் நடக்கிறது.

ஆனால் இந்தப் படத்தை திரையிட இருந்த சில தியேட்டர்களுக்கு எச்சரிக்கை வருகிறதாம்.

## ஜி.வி க்கு இசை விருந்து படைக்கும் காக்கா முட்டை



தனுஷ் வெற்றிமாறன் கூட்டணியில் சேரி குழந்தைகளை வைத்து உருவாக்கப்பட்டுள்ள படம் காக்கா முட்டை. மணிகண்டன் இயக்கத்தில் துணை கதாபாத்திரத்தில் தனுஷ், ஐஸ்வர்யா ராஜேஷ், சிம்பு, பாபு ஆண்டனி உள்ளிட்டோர் நடிப்பில் இப்படத்திற்கு இசையமைக்கிறார் ஜி.வி. பிரகாஷ்.

ஜி.விக்கு இப்படம் இசைவிருந்தாக இருப்பதாகவும், தன் மனதிலிருந்து இப்படத்திற்கு இசையமைத்துள்ளதாகவும் தெரிவித்த அவர் இப்படத்தின் இசை இறுதி கட்டத்தை நெருங்கிவிட்டதாகவும் கூறியுள்ளார். 2013 மே கடைசியில் ஆரம்பிக்கப்பட்ட இப்படம் 2014 ஜூனில் ரிலீஸ் செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## உத்தம வில்லன் படத்தில் ஜெயராம்




விஸ்வரூபம்-2 படத்திற்கு பிறகு ரமேஷ் அரவிந்த் இயக்கத்தில் உலக நாயகன் கமல்ஹாசன் நடித்துக் கொண்டிருக்கும் படம் உத்தம வில்லன். இந்த படத்தின் போஸ்டர் மற்றும் டீஸர் மக்களிடையே நல்ல வரவேற்ப்பை பெற்றது. பூ, மரியான் போன்ற படங்களில் நடித்த பார்வதி இந்த படத்தில் ஒப்பந்தமாகி நடிக்கத் தொடங்கிவிட்டார். மேலும் ஊர்வசி மற்றும் இயக்குனர் பாலசந்தரும் இப்படத்தில் நடிக்க உள்ளனர்.

இதற்கிடையில், உத்தம வில்லன் படத்தில் ஜெயராம் தானும் நடிக்க உள்ளதாக தனது மைக்ரோ பிலாகர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

மேலும் ஜெயராம் உத்தம வில்லன் படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக கூறியுள்ளார். ஜெயராம் உலக நாயகனுடன் தெனாலி, பஞ்ச தந்திரம் போன்ற படங்களில் நடித்தவர். இந்த படத்திற்கு ஜிப்ரான் இசையமைக்க, கிரேசி மோகன் வசனங்கள் எழுதுகிறார்.



# கவிதைப் பூங்கா



## நீ

காதலின் சின்னம் நீ
காதல் வலியின்
சின்னமும் நீ
காதல் கதறுகிறது
என் ஒவ்வொரு பெரு
மூச்சும் எந்தளவு வலி
என்பதை நீ
உணராமல் இல்லை
காதல் சொன்ன போது
கண்ணீர் வந்தது
இப்போதும் கண்ணீர்
வருகிறது வேறுபாடு
உனக்கு தெரியும் ....!

கத்ஸன் தனுசியா

## உனக்காக

சோகங்கள் பலவற்றை
சுமந்த வேளைதனில்
எனக்குள் பிறந்ததம்மா
உன் கருணைக் காதல்
இன்று அது எனக்கு
சுவர்க்கத்தைக் காட்டுதம்மா
மனதெங்கும் பரவசமாய்
பார்தனில் பல வருடம்
வாழ்ந்திடுவேன் உனக்காக...

மட்டுநகர் கண்ணா

## ஊமையாக்கப்பட்ட உண்மைகள்

மன்னாரில் புதைகுழியாம்
மண்டையோடுகள் மீட்பாம்
தொடரும் மர்மங்களுடன்
தொடர்கிறது பத்திரிகை செய்தி.

விடை தேடும் வினாவாய்
விரிகிறது செய்தி
புதைகுழியின் மர்மமும்
புதைக்கப்பட்டு விட்டதோ?

புதைகுழிகள் ஒன்றும்
புதிதல்ல நமக்கு
மாண்டவர்கள் புதைக்கப்பட்டு
தோண்டப்படும் இடங்களே புதிது

உலகமே அறியாத
உண்மைகள் பல
இப்படி எத்தனையோ புதைகுழிக்குள்
இன்னும் வெளிவராத உண்மைகளாய்

புதைகுழிகள் மீட்கப்பட்டாலும்
புதையுண்டு போன உண்மைகள்
இன்னும் ஊமைகளாகவே
இருளுக்குள் முடக்கப்பட்டுவிட்டது

வேல்மகள்
புளியம்பொக்கனை.

## காத்திருக்கிறது இதயம்

ஒரேவிழிப்பார்வையால்
சுற்றி வளைத்தவள்..

மெல்லச் சிரிக்கும்
புன்னகை அழகில்
இதயத்தை தொட்டவள்..

நடந்து வருகையில்
நாடி நரம்புகளில்
காதலிக்கத் தூண்டும்
செங்குருதியில்
காதல் தீயை வளர்த்தவள்

எனக்குள் பூக்கும்
காதல் வார்த்தைகளை
அவளிடம்
சொல்ல முடியவில்லை

தள்ளாடும் மனதில்
தாவிவரும் எண்ணங்களில்
சுதந்திரமாக நீந்துகிறாள்

அவளின் மனதில்
சுதந்திர பறவையாக
நான் – வட்டமடிப்பதை
அவள் – உணர்ந்தபின்
காதல் சுதந்திரத்தை
தருவாள் என்ற நம்பிக்கையில்
காத்திருக்கிறது
என் இதயம்...

வீ.அருள்ராஜா
பாலிநகர்

## ஆதவன்

சாலைச் சூரியன்
ஒளிபட்டுத் தெறிக்கின்றன
கதிரவன்
இமைகள் விழிக்கின்றபொழுது
இதயங்களை உயிர்ப்பிக்கும்
உயிரவன்
உலகிற்கு ஒளிதரும்
தீபமே
எமக்கு ஒளி ஒன்று
தருவாயா?
ஏனெனில் எம் இரவுகள்
இன்னும் விடியவில்லை

சாருலதா
மருதங்கேணியூர்

## படித்ததில் பிடித்தது....

என் இதயமதை வருடிச்சென்ற
இதமான உன் நினைவுகளோடு
மீண்டும் கருவாக ஆசைப்படுகிறேன் இருள்
சூழ்ந்த உன் இதயத்தில்...

காதலா
நீ குளித்து விட்டு
பூமியில் பாதம் பதிக்காதே!
பூமிப்பெண் நாணத்தால்
சிலிர்த்துவிடுகிறாள்
பூகம்பமாய்...!

என் தனிமைகளின் ஒவ்வொரு
இரவுகளும் அவள் ஞாபகங்களின்
எல்லைக்குள் சிறைவைக்கப்பட்டிருக்கிறது..
- பனித்துளி சங்கர்

## சந்தோசம்

கணவன் மனைவி உறவை
கலங்கப்படுத்தாத வரைக்கும்
சந்தோசமே
சந்தோசம் என்ற ஆயுதமும்
வறுமை என்ற வயிற்றுக்கொடுமையும்
இல்லாதவரைக்கும்
வாழ்வில் சந்தோசமே.

பிரவின்
தோணிக்கல்



## நிரந்தர வேலைவாய்ப்புக்கள்

18-50 வயது ஆண் பெண் இருபாலருக்கும் பல வெற்றிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் பிரதான தொழிற்சாலைகளான ஜேம்,கோடியல்,பிஸ்கட்,சொக்லெட், PVC மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல் பொதியிடல் பிரிவுக்கு மற்றும்
துறைமுகம்(தனியார்) சாதாரண ஊழியர்கள்,வெல்டர்
தனியார் பாதுகாப்பு உத்தியோக JSO,LSO,SSO,OIC
கனரக,பெண்,சாரதிகள்,சாரதி உதவியாளர்கள், ஹோட்டல்,ஹோட்டல்,Resturent,Roomboy,Stoorad,chef,Kitchen helper உணவு, தங்குமிடம் குறைந்த விலையில் சம்பளம் 18000, 25000, 35000 வரை வருகை தரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

தொடர்பு :- 0775561883,0776838231



# புனைகதைப் புயல்



இரண்டுபக்கமும் கால்போட்டு வசதியாக இருந்து போனாள். இன்று தான் அம்மாவுடன் மோட்டார் சைக்கிளில் போகிறாள் என்பதால் தமிழுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மாமனுக்கும் தாய்க்கும் நடுவில் இருந்தவாறு கையசைத்து விட்டு புறப்பட்டுப்போயினர். போகும்போது

"இப்ப ஏன் வந்தனி..?"

இப்போது தம்பியாரிடம் கேட்டாள். இந்தக் கேள்விக்குள் அவளது ஏமாற்றமும் அதற்கு காரணமாக கேட்டாள். இந்தக் கேள்விக்குள் அவளது ஏமாற்றமும் அதற்கு காரண மாக அவனது வருகை அமைந்ததால் அவன்மீது கோபமும் தொனித்தது.

"இண்டைக்கு பள்ளிக்கம் போகல்ல. சும்மா பாத்திட்டு போவமெண்டு வந்தன். ஏனக்கா" என்று இயல்பாக பதில் கூறினான்.

"நீ ஏதாவது அலுவலா வந்தியோதெரியாதுநான்வெளிக்கிடுற அவசரத்தில தேத்தண்ணி கூட

"என்ன வீட்டில சாப்பாடு தாறயில்லையோ..?" ஒரு, தாதி கேட்டாள்.

"தாய்ப்பால் குடுக்கிறனீங்களே..." மற்றவள் கேட்டாள்.

"ஓ... ஆனால் சாப்பிடக்கள்ளம்... "தாற மாவில சாப்பாடு செஞ்சு குடுக்கிறனியளா"

இல்லை என்றால் ஏசுவார்கள். தரும்போது ரொட்டி சுடலாம், பிட்டு அவிக்கலாம், லட்டு பிடிக்கலாம்

தொடர் - 47

கைப்பை கனமாயிருக்க அதற்குள் தான் வைத்த சரைபற்றிய நினைவு வர என்ன என அறியும் ஆவலுடன் எடுத்துப்பிரித்தாள். சின்ன சின்ன பைகளில் அடைக்கப்பட்டடு ஏதோ இருந்தது. அப்போது கூட அவளுக்கு அதுபற்றிய அறிமுகமில்லாததால் என்னவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் ஒருபையை எடுத்து கிழித்தாள்.

## முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி



அவனது வருகை அமைந்ததால் அவன்மீது கோபமும் தொனித்தது.

"இண்டைக்கு பள்ளிக்கம் போகல்ல. சும்மா பாத்திட்டு போவமெண்டு வந்தன். ஏனக்கா" என்று இயல்பாக பதில் கூறினான்.

"நீ ஏதாவது அலுவலா வந்தியோதெரியாதுநான்வெளிக்கிடுற அவசரத்தில தேத்தண்ணி கூட தரயில்லை..." சமாளித்துக் கூறினாள்.

"நான் மைலோ குடிச்சனான்."

"எப்ப..?"

"அத்தான் கூப்பிட்டு மோட்டச்சைக்கில் திறப்புத்தரயிக்க தந்தவர்."

தன்னைப்புரிந்து கொள்ளாது ராமும் இப்படி செயற்படுகிறான் என நினைக்க அவன்மீது கோபமாக இருந்தது. என்ன செய்யமுடியும் யாரிடம் முறையிட முடியும் எல்லாம் விதி எனநினைத்து மனமாறினாள். தனக்கும் ஒருநாள் விடி யும். தன் துயரங்கள் முடியும் என நம்பிக்கையுடன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு காத்திருந்தாள்.

எல்லாம் விதி என நினைத்தவள் பிள்ளையின் காட்டை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். பிள்ளை முதலே ஏறி மாமனைக்கட்டிப்பிடித்தபடியிருந்தாள். போட்டுவாறம் என்று கூறி மோட்டார் சைக்கிளில் ஏறியவள் கடைப்பக்கமே திரும்பிப்பார்க்காமல் போனாள். தமிழ்

"சித்தா பாய்.... சொக்கா வேண்டிவாறன்..."

இரண்டுபக்கமும் கால்போட்டு வசதியாக இருந்து போனாள். இன்று தான் அம்மாவுடன் மோட்டார் சைக்கிளில் போகிறாள் என்பதால் தமிழுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மாமனுக்கும் தாய்க்கும் நடுவில் இருந்தவாறு கையசைத்து விட்டு புறப்பட்டுப் போயினர். போகும்போது

"இப்ப ஏன் வந்தனி..?"

இப்போதுதம்பியாரிடம்

தரயில்லை..." சமாளித்துக் கூறினாள்.

"நான் மைலோ குடிச்சனான்."

"எப்ப..?"

"அத்தான் கூப்பிட்டுமோட்டச்சைக்கில் திறப்புத்தரயிக்க தந்தவர்."

"ஆ... அம்மா என்ன செய்யிறா...."

என்று தன் மனத்தில் எழுந்த சஞ்சலங்களை மாற்ற வீடுபற்றிக்கதைத்தபடி கிளினிக் போனாள். தம்பியாரை வெளியே நிற்க விட்விட்டு உள்ளே சென்றாள். அங்கு வழமையாக நின்ற குடும்பநல உத்தியோகத்தரைக் காணவில்லை. புதிய இளம் பெண்கள் இருவர் நின்றனர். இன்முகத்துடன் வரவேற்றனர். அவள் காட்டை கொடுத்தாள். ஒருத்தி வாங்கி பெயரை வாசித்து அதற்குரிய 'ஊ' காட்டைத்தேடி எடுத்தாள். மற்றவள் தமிழுடன் உரையாடியவாறு நிறை அளப்பதற்குரிய வேலைகளைச் செய்தாள். தராசில் தொங்கிய தமிழ் சிரித்தபடியிருந்தாள். நிறையை குறித்தாள். உயரத்தையும் அளந்தாள்.

என்றெல்லாம் சொன்னார்கள்... அதை வைத்துக்கொண்டு.

"ரொட்டி சுட்டுக்குடுத்தனான். லட்டு செய்தனான்.." என்று சொல்லி முடித்தாள்.

"பிள்ளை நிறை கூடயில்லை நல்லா சாப்பாடு செய்து குடுங்கோ.. மரக்கறி எல்லாம் போட்டு அவிச்ச தண்ணியை குடுங்கோ சத்து ஏறும்."

என்று கூறி மாப்பைகளை எடுத்துக்கொடுத்தாள். பின்னர் இருவரும் ஏதோ கதைத்து விட்டு உள்ளேபோய்ஒருசரைகொண்டுவந்து கையில் திணித்து... "உங்களுக்கு..."

என்றாள். முதலில் அது என்ன என்று தெரியாததால் ஏதோ சத்துக்குழிசை என நினைத்தாள். பக்குவமாய் வாங்கி 'கான் பாக்கில்' வைத்துக்கொண்டாள். காட்டை வாங்கி விடைபெற்று மோட்டார் சைக்கிளில் ஏறி வீடுவந்து சேர்ந்தனர். மாப்பயினைத்தூக்கி ஏறிந்துவிளையாடினாள்தமிழ். காட்டை கவனமாகதனது 'கொம்பற்பாக்கினுள்' கொண்டு போய் வைத்தாள். தனது

அது மடியில் விழுந்தது. அதிர்ந்து போனாள். பட்டென எடுத்து கையுள் பொத்திக்கொண்டு திரும்பி யாராவது பார்க்கிறார்களா என அவதானித்தாள். நல்ல வேளை யாக யாரும் பார்க்கவில்லை ஆயி னும் அவளது கை நடுங்கியது. இதுபற்றி படிக்கும் காலத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு செயற்பாட்டின் போது பார்த்திருக்கிறாள்.

ஆனாலும் அதன் தேவை இல்லாத போது அவர்கள் தவறுதலாக தந்தது அவளுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது. உண்மையில் அவள் இப்படியிருக்கும் போது இதை வைத்திருப்பதை யாராவது கண்டால் இவள்பற்றி தவறாக நினைத்து விட நிறைய வாய்ப்பிருப்பதை புரிந்து கொண்டாள். இப்போது உடம்பு பொல பொலவென வியர்த்தது.

கிழித்ததை அருகிலிருந்த காகிதத்தில் சுற்றி கைப்பையினுள் வைத்துப்பூட்டினாள். மற்றவற்றை எடுத்து வெளியில் தெரியாதவாறு காகிதத்தால் சுற்றி பொலுத்தீன் பையி னுள் வைத்து தனது 'கொம்பற் பாக்கினுள்' நன்றாக அடியில் வைத்துப்பூட்டினாள். இப்போது சற்று நின்மதியாக இருந்தது. ஆயி னும் அதை எப்படியாவது அழித்து விட வேண்டும் என்று நினைத்தபடி வெளியில்வந்தாள்.

"என்ன பிள்ள உப்பிடிவே ர்க்குது.. ஏதாவது செய்யுதே..." கடைக்குள் நின்ற மாமி கேட்டாள்.

"இல்...இல்ல மாமி..." என்று கதையை மழுப்பினாள்.

ராம்மீதுள்ள ஆத்திரம் இன்னமும் தீரவில்லை அவனைப்பார்த்து ஏதாவது சாட்டில் நாலுவார்த்தை ஏசவேண்டும் என நினைத்தாள்.

அவள் வருவாள்...

# ஆன்மீக உலகம்

## ஆத்மா அழிவற்றது – பகவத்கீதை



இறைவன் உருவம் இல்லாதவராயினும் நாம் அவரை நினைப்பதற்காகவும் வணங்குவதற்காகவும் உருவ வடிவங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது. யோகிகள், ஞானிகளல்லாத சாதாரண மனிதர்கள் மத்தியிலே அவர்கள் மனங்களில் இறைவனை நிறுத்துவதற்கு உருவ வழிபாடு இன்றியமையாததாகும்.

இப்படியான உருவங்கள் இறைவனின் தன்மைகளைக் குறிப்பவையாக அமைவதால் ஆரம்பத்தில் இறைவனைப்பற்றி அறிந்து கொள்ள உருவவழிபாடு முக்கியமானதாகின்றது. இறைவனை வெவ்வேறு உருவங்களில் தரிசிக்க காரணம் என்ன? ஆம். இறைவன் ஒருவரே தான்.

அவர் வடிவம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்ட வராயினும் சத்தியினாலே பல்வேறு தொழில்களைச் செய்வதால் அவர் செய்யும் திருத்தொழில்களைப் பொறுத்து வெவ்வேறு பெயர் கொண்டு வெவ்வேறு உருவங்களில் வழிபடுகின்றோம்.

இதனை வாரியார் சுவாமிகள் மிக அழகாக தங்கம் ஒன்று தானென்றாலும் அது வெவ்வேறு வடிவங்களில் அணிகலன்களாகச் செய்யப்படும் பொழுது வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றதென்று கூறி விளங்கவைப்பார்.

கோவிலினுள்ளே எத்தனை பரிவார மூர்த்திகள் இருந்தாலும் பரம்பொருள் ஒன்றே என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஆலய நுளைவாயில்களிலேயே துவார பாலகர்கள் தங்களது சுட்டு விரல்களைக் காட்டி (ஒன்று என்ற பாவனையாக) நிற்கின்றார்கள்.

## அல்லாஹ் எங்கு இருக்கிறான்...?



நிச்சயமாக உங்கள் இறைவன் அல்லாஹ்வே அவன் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான் - பின்னர் தன் ஆட்சியை அர்ஷின் மீது அமைத்தான் (10:3)

அர்ரஹ்மான் அர்ஷின் மீது அமைந்தான். (20:5)

நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ் தான் ஆறு நாட்களில் வானங்களையும், பூமியையும் படைத்துப் பின் அர்ஷின் மீது தன் ஆட்சியை அமைத்தான் (7:54)

மேலும் நபி(ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தில் மக்காவிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா சென்று அங்கிருந்து ஜிப்ரயீல் (அலை) அவர்களுடன் "புராக்" என்னும் வாகனத்தின் மூலம் ஒவ்வொன்றாக ஏழு வானத்தையும் கடந்து சென்று "சித்ரத்துல் முன்தஹா" என்ற இலந்தை மரத்தை (அது தான் எல்லை) அடைந்து அல்லாஹ்விடம் உரையாடி ஐம்பது நேரத் தொழுகையை ஐந்து நேரத் தொழுகையாகக் குறைத்து அல்லாஹ் இந்த சமுதாயத்தின் மீது கடமையாக்கியதையும், மேலும் பகரா அத்தியாயத்தின் கடைசி இரு வசனங்களையும் (2:285,286) பெற்றுத் திரும்பினார்கள்.

(ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் கருத்து - நூல்: முஸ்லிம்).

பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள் வானத்தில் உள்ள அல்லாஹ் உங்கள் மீது இரக்கம் காட்டடுவான். இப்னு உமர்(ரலி) திர்மிதி, அஹ்மத்

ஒரு முறை நபி(ஸல்)அவர்களிடம் ஒரு அடிமைப் பெண்ணைக் கொண்டு வரப்பட்டது. அவளிடம் அல்லாஹ் எங்கே?(இருக்கிறான்) என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவள் வானத்தில் என்றாள், நான் யார்? எனக் கேட்டபோது நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என விடையளித்தாள். உடனே நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களைப் பார்த்து அவளை விடுதலைச் செய்து விடுங்கள் ஏனெனில் அவள் ஈமான் கொண்டவளாக இருக்கிறாள் என்றனர். (முஸ்லிம்)

திருமறை வசனங்கள் மற்றும் ஹதீஸின் அடிப்படையில் சிந்தித்தோமானால் அல்லாஹ் ஏழு வானத்திற்கும் மேல் அர்ஷில் உள்ளான் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

திருமறை மற்றும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளபடி அப்படியே அர்ஷில் அமைந்தான் என்பதை நம்ப வேண்டும். நாம் ஏதும் கற்பனை செய்தல் கூடாது. அப்படி கற்பனை செய்தால் அது பித்அத் ஆகும். இமாம் மாலிக்(ரஹ்) தாரமி.

பெரும்பான்மையான மக்கள் இறைவன் எங்கும் நிறைந்து இருக்கிறான், காணும் இடத்திலெல்லாம் உள்ளான், தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான் என்றெல்லாம் கூறுவர். இக்கருத்துகள் அனைத்தும் இஸ்லாமியக் கொள்கையில் கோளாறு செய்வதற்காக திட்டமிட்டு பரப்பப்பட்ட கொள்கையாகும். இதை ஒரு உதாரணம் மூலம் மிகச் சுலபமாக விளங்கலாம்.



இயேசு நாதர் கடவுள் (யோவன் 1: 1, ஏசாயா 9: 6)

முகமது ஒரு பாவி இயேசு நாதர் எந்தப்பாவமும் செய்யவில்லை.

கிறிஸ்துவுக்கு எதிரிகள் இல்லை, அவரை எதிர்க்கின்றவர்களையும் அவர் நேசிக்கின்றார்.

முகமது யுத்தத்திற்கு தீர்க்கதரிசியாயிருந்தான்

இயேசு நாதர் சமாதானத்திற்கு தேவனாக இருக்கின்றார். (ஏசாயா 9: 6,7)

முகமதுவின் சீடர்கள் தங்கள் மார்க்கத்திற்காக மனிதர்களை கொன்றார்கள் இயேசுவின் சீடர்கள் தங்களின் நம்பிக்கைக்காக கொல்லப்பட்டனர். (அப்போஸ்தலர் 12: 2, 2 தீமோத்தேயு 4: 7)

முகமது மனித உயிர்களை எடுப்பவனாக காணப்பட்டான்

இயேசு நாதர் எமக்காக தம்முடைய உயிரை கொடுத்தார்.(யேவான் 10: 27, 28)

முகமது கையாண்ட முறை கட்டாயப்படுத்துதல் இயேசு நாதரின் போதனை: விரும்பி, மனந்திரும்பி, ஏற்றுக்கொள்ளுதல்.

முகமது ஆயுத பலத்தினை நம்பினான் இயேசு நாதர் விசுவாசத்தை பிரசங்கித்தார். (யோவான் 6:29, 35)

முகமது சண்டைக்காரனாக காணப்பட்டான் இயேசு நாதர் விடுவிப்பவராக, காப்பாற்றுபவராக காணப்பட்டார். (கொலோசேயர் 1:13 1 தெசலோனிக்கேயர் 1:10)

முகமது தன்னுடைய எதிரிகளை வாளினால் வென்றான் இயேசு நாதர் தேவனுடைய வார்த்தையினால் தம்முடைய சத்துருக்களை வென்றார் (எபிரேயர் 4:12, அப்போஸ்தலர் நடபடிகள் 2:37)

முகமது சொன்னான் மதம் மாறு அல்லது செத்துமடி இயேசு நாதர் சொன்னார் விசுவாசி நித்தியமாக வாழ்ந்திரு. (யோவான் 6:47 11:25-26)

முகமது தன்னை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிராக புனிதப்போர் (ஜிகாத்) மேற்கொண்டான் இயேசு நாதர் தம்மை பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்து பிசாசை ஜெயித்தார்(கொலோசேயர் 2: 14-15). இயேசு நாதருடைய சீடர்களும் அப்படியே செய்தார்கள்.

முகமது போதித்தான் "அவநம்பிக்கையுள்ளவர்கள் சாக வேண்டும்". இயேசு நாதர் தம்முடைய போதனையை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்காக " பிதாவே இவர்களை மன்னியும், அறியாமல் செய்கின்றார்கள்" என்று ஜெபித்தார்.(லூக்கா 23: 24)

முகமது யுத்தத்தினால் மக்களை மேற்கொண்டு அவர்களை தன்னை ஏற்றுக்கொள்ள செய்தான் இயேசு நாதர் அன்பினாலே ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்.(2 கொரிந்தியர் 5: 14)

முகமதின் செயல்களின் பிரதிபலிப்பினால் தற்காலத்து பயங்கரவாதக்கும்பல்கள், அநேக அவமான காரியங்களை செய்கின்றனர் அதுவும் தங்கள் கடவுள் அல்லாவின் பெயரில். கிறிஸ்துவின் சீடர்கள், இயேசு கிறிஸ்துவின் வசனங்களை கடைப்பிடிக்கின்றனர்: "சமாதானம் செய்கின்றவர்கள் பாக்கியவான்கள்". (மத்தேயு 5: 9)

அநேக முஸ்லிம்கள் நல்லவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். காரணம்: அவர்கள் முகமதுவை பின்பற்றாததனால். இயேசுவின் சீடர்கள் நல்லவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும் இருக்கின்றனார். காரணம் அவர்கள் இயேசுவை பின்பற்றுவதால். (ரோமர் 12: 17- 21)

முகமது கட்டளை கொடுத்தான் யூதர்களை கொலைசெய்யும்படியாக

இயேசு நாதர் சொன்னார் முதலில் யூதர்களுக்குவிசேஷம்அறிவிக்கப்பட வேண்டுமென்று (ரோமர் 1: 16).

முகமது கட்டளை கொடுத்தான் விக்கிரக ஆராதனை செய்பவர்களை கொலைசெய்யும்படியாக இயேசு நாதர் சொன்னார் சகல மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கும்படியாக (மாற்கு 16: 15).

இஸ்லாம் மதத்திலிருந்து விலகுபவர்கள் இஸ்லாம் சமுதாயத்தினராலேயே கொல்லப்படலாம் கிறிஸ்தவன் ஒருவன் தன்னுடைய மதத்திலிருந்தோ, அல்லது கிறிஸ்துவை விட்டோ விலகினாலும், எந்தவிதமான நியாயத்தீர்ப்புக்களும் கிறிஸ்தவர்கள் செய்யக்கூடாது.

இஸ்லாம் மதம் கட்டாயமாக வரவேற்கப்பட வேண்டும், நிராகரிப்போர் கொலை செய்யப்படலாம்

கிறிஸ்துவின் போதனைகளை நிரகரிப்பதோ, அல்லது ஏற்பதோ என்பது ஒவ்வொரு மனிதனும் தானே தீர்மானிக்க வேண்டிய காரியம்.

முகமது: இயேசு நாதரை ஒரு நல்ல தீர்க்கதரிசியென்று கூறினான் இயேசு நாதர் சொன்னார் (அநேக கள்ளத்தீர்க்க தரிசிகள் வந்து ஜனங்களை வஞ்சிப்பார்கள் என்று) முகமது ஒரு கள்ளத்தீர்க்கதரிசி (யோவான் 10: 10, மத்தேயு 24: 11)

முகமது சொன்னான் அல்லா என்று கடவுள் உண்டு என்று இயேசு நாதர் சொன்னார் தாம் கடவுளாக இருந்தவர் என்று ( யோவான் 14: 9, 5: 18)

முகமதுவின் கல்லறை மூடியிருக்கின்றது. ஏன் என்றால் முகமது இறந்து விட்டான். இயேசு நாதரின் கல்லறை துறந்திருக்கின்றது, ஏனென்றால் அவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபடியால்.

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

எந்தவொரு நாட்டிற்கும் நாம் அடிபணியப்போவதில்லை என சவால் விட்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அவ்வாறே நடந்து கொள்வாராக இருந்தால் அமெரிக்க காலணித்துவம் உருவாவதை தடுத்து நிறுத்தமுடியும் இல்லையெனில் இலங்கை பாரிய பின்னடைவை நோக்கிச்செல்லும் அதேவேளை தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் எவ்வாறு தொழில் செய்து வாழ்கிறார்களோ அவ்வாறான நிலைமையே ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

# அறிவியல் உலகம்

## ஓசோன் படலத்தை பாதிக்கும் புதிய வாயுக்கள்




பூமியின் பாதுகாப்பு அடுக்கான ஓசோன் படலம் பல்வேறு வாயுக்களால் பாதிப்படைந்து வருகிறது. இந்நிலையில், மனித செயற்பாடுகளின் விளைவால் உருவாகும் நான்கு புதிய வாயுக்கள் ஓசோனை பாதித்து வருவதாக கிழக்கு அங்கோலியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

பூமியில் இருந்து 15 முதல் 30 கிலோ மீட்டருக்கு மேல் வளிமண்டலத்தில் இருக்கும் ஓசோன் படலம் புற ஊதாக்கதிர் பாதிப்பை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த புற ஊதாக்கதிர் மனிதர்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை. பிரிட்டிஷ் அண்டார்டிக் ஆய்வு குழுவினர் ஓசோன் படலத்தில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதை 1985 ஆம் ஆண்டில் முதல் முறையாக கண்டுபிடித்தனர். இந்த பாதிப்புக்கு காரணம் சி.எப்.சி. வாயுக்கள் என்பது கண்டறியப்பட்டது.

1920 களில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வாயுக்கள் குளிர்சாதனப்பெட்டி, வாசனைத் திரவியங்கள் உற்பத்திக்கு பரவலாக பயன்படுத்தப்படுகிறது. சி.எப்.சி. வாயுக்களை கட்டுப்படுத்த சர்வதேச அளவில் கருத்தொற்றுமை உருவானது. இதன்மூலம் 1987 ஆம் ஆண்டு முதல் இந்த வாயுக்களை வெளிப்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டது. கடந்த 2010ல் அதற்கு தடையும் விதிக்கப்பட்டது.

இதில் மூன்று வாயுக்கள் சி.எப்.சி. வாயுக்கள். மற்றவை ஹைட்ரோ குளோரோ கார்பனாகும். இவை ஓசோன் படலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் திறன் கொண்டவையாகும். எனினும் இந்த வாயுக்கள் சிறிய அளவிலேயே வெளிப்படுத்தப்படுவதாகவும் இவை தற்போதைய நிலையில் அபாயம் இல்லை என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## சம்சுங் களமிறக்கும் புதிய டேப்லட்



Samsung நிறுவனமானது அப்பிளின் Retina iPad Mini டேப்லட்டிற்கு போட்டியாக Galaxy TabPro 8.4 எனும் புதிய டேப்லட்டினை அறிமு கம் செய்யவுள்ளது. இந்த டேப்லட் ஆனது 8.4 அங்குல அளவும், 2560 x 1600 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 2.3Ghz வேகத்தில் செயற்படவல்ல Quad Core Snapdragon 800 Processor பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் 16GB அல்லது 32GB சேமிப்பு நினைவகத்தினைக் கொண்டுள்ளதுடன், 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென 2 மெகாபிக்சல்களை உடைய கமெரா ஆகியனவற்றையும் கொண்டிருக்கின்றது.

## அமெரிக்காவில் முதன் முறையாக தனது விற்பனை நிலையத்தை திறக்கு கூகுள்




இணைய ஜாம்பவான் ஆன கூகுள் நிறுவனம் அமெரிக்காவில் முதன் முறையாக தனது விற்பனை நிலையத்தினை திறக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. Manhattan இல் Greene Street பகுதியில் திறக்கப்படவுள்ள இவ் விற்பனை நிலையம் தொடர்பான தகவல்களை Crains என்பவர் வெளியிட்டுள்ளதுடன், புகைப்படம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் கூகுள் தனது உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தலை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையத்திற்கு அருகில், அப்பிளின் விற்பனை நிலையம் ஒன்றும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## Angry Birds ஹேமின் புதிய பதிப்பு வெளியீடு




ஹேம் விரும்பிகளை கட்டிப்போட்ட மிகவும் பிரபல்யமான ஹேமான Angry Birds இன் புதிய பதிப்பு வெளியாகியுள்ளது. மொபைல் சாதனங்களுக்கான மைக்ரோசொப்ட்டின் Windows Phone இயங்குதளத்திற்கான இப் புதிய பதிப்பில் 15 புதிய மட்டங்கள் (டுநஎநடள) உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்புதிய மட்டங்களுடன் மொத்தமாக 45 மட்டங்களை கொண்ட இக்ஹேமினை Windows Phone store தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

## ZTE அறிமுகம் செய்யும் புதிய ஸ்மார்ட் கைப்பேசி

ஸ்மார்ட் கைப்பேசி உற்பத்தியில் ஏனைய நிறுவனங்களுக்கு போட்டியாக திகழும் ZTE விரைவில் புத்தம் புதிய கைப்பேசி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது.

ZTE Grand S EXT எனும் இக்கைப்பேசியானது தற்போது வடிவமைக்கப்பட்டு வரும் நிலையில் அதன் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடிய இக்கைப்பேசியில் முதன் முறையாக உலோகம், பிளாஸ்டிக்கினால் ஆன வெளியமைப்பைக் கொண்ட NMT (Nano Molding Technology) அறிமுகப்படுத்தப்படுகின்றது.

## இந்தியாவில் அறிமுகமாகும் ஸ்மார்ட் தொலைபேசி



நோக்கிய நிறுவனமானது புதிதாக வெளியிட்டுள்ள Nokia X ஸ்மார்ட் கைப்பேசியானது இம்மாதம் 15ம் திகதி இந்தியாவில் அறிமுகமாகின்றது. இக்கைப்பேசியானது முதன் முதலில் கடந்த மாதம் பார்சிலேனியாவில் இடம்பெற்ற மொபைல் வேர்ள்ட் காங்கிரஸ் நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டது.

4 அங்குல தொடுதிரை, 1GHz வேகத்தில் செயற்படக்கூடிய Dual-Core Snapdragon S4 8225 Processor, 512MB RAM, என்பனவற்றுடன் 4GB சேமிப்பு நினைவகத்தினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியின் விலையானது 8,500 இந்திய ரூபாய்கள் ஆகும்.

## அழகாக ஜொலிக்கும் கடல் வண்ணாத்துப்பூச்சிகள்



கடல் வண்ணாத்துப்பூச்சிகள் மிகவும் அழகாக இருக்கும், அண்டார்டிகா போன்ற குளிர் பிரதேசங்களில் இவை காணப்படும். இதன் இறக்கைகள் கண்ணாடி மாதிரி பளபளவென்று இருக்கும், இதன் நரம்புகள் பிங்க் கலரிலும், இறக்கைகள் ஆஷ் கலரிலும் கண்ணாடி போன்று இருப்பதால் இது கடலுக்குள் பறந்து செல்லும் போது இதன் அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

இவை கடல் நத்தைகள் குடும்பத்தை சேர்ந்தவை, தண்ணீருக்குள் மிகவும் அழகான, சீரான வேகத்தில் இவை பறக்கும். இந்த வகை வண்ணாத்திபூச்சிகள் உள்ள மற்றொரு வகைக்கு, ஓடுகள் உண்டு.


## சீனாவில் அறிமுகப்படுத்தப்படும் Oppo Find 7 கைப்பேசி




Oppo நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ள Oppo Find 7 எனும் கைப்பேசியானது சீனாவின் தலைநகரான பீஜிங்கில் வெளியிடப்படவுள்ளது. எதிர்வரும் மார்ச் 19ம் திகதி இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இருவகையான அன்ரோயிட் சாதனங்களை அந்நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

இதில் ஒன்று 1920 x 1080 Pixel Reslution உடைய FHD தொடுதிரையினைக் கொண்டதாகவும், மற்றையது 2560 x 1440 Pixel Reslution உடைய QHD தொடுதிரையினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

## Gionee Elife S5.5 கைப்பேசி விரைவில் அறிமுகம்



மிகவும் மெலிதான கைப்பேசியாக கருதப்படும் Gionee Elife S5.5 ஆனது இம்மாதம் 18ம் திகதி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 5.5 மில்லி மீற்றர்களே தடிப்புடைய இக்கைப்பேசியானது 5 அங்குல அளவுடையதும், 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 1.7GHZ Octa Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினையும் கொண்டுள்ளன.

மேலும் 16GB சேமிப்பு கொள்ளளவினைக் கொண்டுள்ளதுடன், 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளன. இதன் விலையானது 374 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## 126 மில்லியன் ஆண்டுகள் பழைமையான முதலை இனம் கண்டுபிடிப்பு



பூமியில் 126 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புதிய வகை சின்னஞ்சிறு முதலை இனத்தின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவின் வைட் தீவிலேயே இந்த எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இவற்றின் இருவேறு பாகங்கள் வெவ்வேறு ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதலையின் மண்டையோட்டின் பின் அரைப்பகுதி வைட் தீவில் சாள்ட்டவுன் எனும் இடத்திற்கு அருகிலுள்ள கடற்கரையில் டியனி திரேவர்தன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதன்பின் மூன்று மாதங்கள் கழித்து, ஆஸ்ரின் மற்றும் பின்லி நாதன் என்பவர்களால் மண்டையோட்டின் மற்றொரு பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் கூறுகையில், 126 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த முதலை இனத்தின் எச்சமாக இருக்கலாம் என்றும், 2 அடி நீளம் மட்டுமே இருந்திருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டு  உலகம்

## ஐக்கிய அரபு நாடுகளில் ஐபி.எல் போட்டிகள்




ஐபி.எல் தொடரின் 7வது சீசன் போட்டிகள் எங்கு நடைபெறும் என்பது குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்தியாவில் லோக்சபா தேர்தல் நடைபெற உள்ளதால், ஐபிஎல் 7வது சீசன் போட்டிகள் நடைபெறும் இடங்கள் குறித்து குழப்பம் நீடித்து வந்தது.

இந்நிலையில் ஐபிஎல் தொடரின் 7வது சீசன் போட்டிகள் ஐக்கிய அரபு நாடுகளில் முதல் பாதியும், இரண்டாவது பாதி இந்தியா அல்லது வங்கதேசத்திலும் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி போட்டிகள் ஏப்ரல் 16ல் ஐக்கிய அரபு நாடுகளில் தொடங்குகிறது, எனினும் இறுதிப் போட்டி இந்தியாவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் 16 போட்டிகள் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள அபுதாபி, சார்ஜா, துபாய் உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சகம் பாதுகாப்பு அளிக்கும் வகையில், மே 1 முதல் 13 வரையிலான போட்டிகள் இந்தியாவில் நடத்தப்படும் என்றும், மாறாக பாதுகாப்பு அளிக்கப்படாமல் இருப்பின் இப்போட்டிகள் வங்கதேசத்திலும் நடத்தப்படும் என்று ஐபிஎல் தலைவர் ரன்ஜிப் பிஷ்பால் தெரிவித்துள்ளார்.

## சச்சினின் உருவம் பொறித்த வெள்ளி நாணயங்கள்



இந்திய அணியின் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சினின் முகம், பெயர் மற்றும் கையெழுத்து அடங்கிய 15,921 வெள்ளி நாணயங்கள் வெளியிடப்படுகிறது. சதத்தில் சதம் அடித்து சாதனை படைத்த சச்சின், கடந்தாண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். 200 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளவர், மொத்தம் 15,921 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதனை நினைவுபடுத்தும் வகையில் தனி யார் நகைக்கடை ஒன்று வெள்ளி நாணயங்களை வெளியிட உள்ளது.

இந்த நாணயத்தின் மேற்புறத்தில் சச்சின் பெயர், கீழே 200வது டெஸ்ட்-2013 என எழுதி, நடுவில் இவரது முகம் பதிக்கப்பட்டு இருக்கும். ஏற்கனவே 10, 20 கிராம் எடையில் நாணயங்கள் உள்ளதால், இது 200 கிராம் எடையில் விற்பனைக்கு வரவுள்ளது.

## இங்கிலாந்து அணியில் இயன்பெல்



டுவென்டி-20 உலகி கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இயன்பெல் இடம்பெற்றுள்ளார். சமீபத்தில் நடந்த மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியின் போது இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் ஜோ ரூட்டுக்கு கட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

இதனால் காயம் காரணமாக ஜோ ரூட், டுவென்டி -20 உலக கிண்ணத் தொடரிலிருந்து விலகியுள்ளார், இவருக்கு பதிலாக இயன்பெல் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கு ஐ.சி.சி.யும் ஒப்புதல் அளித்துவிட்டது, இவர் 20 ஓவர் போட்டியில் விளையாடி 3 ஆண்டுக்கு மேல் ஆகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவிஸ் பெட்மிண்டனில் சாய்னா வெற்றி



சுவிஸ் ஓபன் பெட்மின்டன் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் செய்னா வெற்றி பெற்றார். சுவிட்சர்லாந்தில் உள்ள பசல் நகரில், சுவிஸ் ஓபன் பெட்மின்டன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை செய்னா, ஜப்பானின் கிசாட்டோவை சந்தித்தார்.

முதல் செட்டை 21:12 என கைப்பற்றிய செய்னா, இரண்டாவது செட்டையும் 21:12 என வென்றார். முடிவில், செய்னா 21:12, 21:12 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் காஷ்யப், ஜெர்மனியின் லூகாசை 21:15, 21:14 என வீழ்த்தினார்.

## ரியான் ஹாரிசிற்கு அறுவைச்சிகிச்சை



முழங்கால் காயத்துக்கு ஒப்பரேஷன் செய்த ஹாரிஸ், அடுத்த 6 மாத காலம் போட்டிகளில் பங்கேற்க முடியாது. அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரியான் ஹாரிஸ், (34) சமீபத்தில் தென் ஆபிரிக்காவில் நடந்த டெஸ்டில், கடைசி நேரத்தில் 2 விக்கெட் வீழ்த்தி, டெஸ்ட் தொடரை 2:1 என, அவுஸ்திரேலிய அணி கைப்பற்ற உதவினார்.

இதுவரை 24 டெஸ்டில் மட்டும் பங்கேற்ற இவர் 103 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

இவரது வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்கு ஒப்பரேஷன் செய்யப்பட்டது. இதுகுறித்து கிரிக்கெட் அவுஸ்திரேலியா பிசியோதெரபிஸ்ட் அலெக்ஸ் கூறுகையில், ஹாரிஸ் வலது முழங்கால் இணைப்பில் இருந்த எலும்பு துண்டு சிதறல்கள் அகற்றப்பட்டன. மீண்டும் போட்டிகளுக்கு திரும்ப 6 மாதம் தேவைப்படும்.

அதாவது, வரும் அக்., மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தான் ஹாரீஸ் பங்கேற்க முடியும், என்றார்.

## பிரபல வீரரின் உருவத்தில் தீவிரவாதியா?



காணாமல் போன மலேசிய விமானத்தில் போலி பாஸ்போர்டில் பயணம் செய்ததாக கருதப்படும் நபரின் உருவம் கால்பந்து வீரர் பலோடெலியுடன் ஒத்துப்போவதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மலேசியன் ஏர்லைன்ஸ் எம்.எச்.,370 என்ற விமானம், கோலாலம்பூரிலிருந்து கடந்த 7ம் திகதி நள்ளிரவு சீன தலைநகர் பீஜிங்கிற்கு புறப்பட்டது. 227 பயணிகள், 12 ஊழியர்கள் அடங்கிய இந்த விமானம் சிறிது நேரத்தில் விமான கட்டுப்பாட்டை இழந்தது. தற்போது வரை எங்கு சென்றது, என்ன ஆனது என தெரியவில்லை. தவிர இதில் இருவர் திருட்டு பாஸ்போர்ட் மூலம் பயணம் செய்துள்ளனர், இவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

ஒருவர் இத்தாலிய கால்பந்து வீரரான மரியோ பலோடெலி மாதிரி இருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இது குறித்து மலேசிய விமானத்துறை அமைச்சர் அசாருதின் அப்துல் கூறுகையில், உங்களுக்கு பலோடெலியை தெரியுமா? இவரின் உருவம் எப்படி இருக்கும்? இதை போலத்தான் ஒருவர் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

இவர் கறுப்பினத்தை சேர்ந்தவர் என்பதால், அமைச்சர் கூறிய கருத்து இனவெறியை தூண்டுவதாக உள்ளது என சமூக வலைத்தளங்களில் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

## தீவிரவாதமாக பயிற்சி பெறும் புஜாரா



ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் நிரந்தர இடம்பிடிப்பதற்காக தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார் புஜாரா. டெஸ்ட் ஸ்பெஷலிஸ்ட் எனப் பெயர் பெற்ற புஜாரா, சமீபத்தில் வங்கதேசத்தில் நடைபெற்ற ஆசிய கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெற்றிருந்தார்.


மிடில் ஆர்டரில் பலம் சேர்ப்பார் என்பதற்காக புஜாராவை அணி நிர்வாகம் தெரிவு செய்திருந்தது. ஆனால் ஆடும் 11 பேர் கொண்ட அணியில் புஜாரா சேர்க்கப்படவில்லை. புஜாரா மற்றும் ஸ்டுவர்ட் பின்னிக்கு வாய்ப்பு வழங்காததை முன்னாள் அணித்தலைவர் காவஸ்கர் கண்டித்திருந்தார்.

இருப்பினும், புஜாரா மனம் தளராமல் ஒருநாள் அணியில் தனக்கென நிரந்தர இடத்தைப் பிடிக்க முயற்சித்து வருகிறார். இதுகுறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், பகுதி நேர பந்து வீச்சாளராக செயற்படுவதற்காக தீவிரமாக பந்து வீச்சு பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

அணித்தலைவர் விரும்பினால் பகுதி நேர பந்து வீச்சாளராக அணிக்கு உதவுவேன். என் ஆட்டத்தை நாளுக்குநாள் மெருகேற்ற முயற்சித்து வருகிறேன். எந்த இடத்தில் தவறு செய்கிறேன் என்பதை ஆராய்ந்து அதைத் திருத்தி வருகிறேன்.

ஏழாவது ஐபிஎல் தொடரில் என் திறமையை நிருபிக்கும் பட்சத்தில் அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள உலக கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெற முடியும் என தான் நம்புவதாக தெரிவித்துள்ளார். மேலும் ஐபிஎல் போட்டிகளை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும், அதன்மூலம் நல்ல அனுபவம் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## காலிறுதியில் சனம் சிங்



ஐ.டி.எப்., டென்னிஸ் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் சனம் சிங், ஜீவன் நெடுஞ்செழியன், ஸ்ரீராம் பாலாஜி உள்ளிட்டோர் முன்னேறினர்.


சென்னையில், ஆண்களுக்கான ஐ.டி.எப்., டென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று நடந்த ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், இந்தியாவின் சனம் சிங், சக வீரர் ரோனக் மனுஜாவை சந்தித்தார். அபாரமாக ஆடிய சனம் சிங் 6:2, 6:3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் 6:1, 6:2 என்ற நேர் செட் கணக்கில், சகநாட்டை சேர்ந்த விக்னேஷ் பெரனாமல்லூாரை வீழ்த்தினார். மற்றொரு ஆட்டத்தில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் 7:5, 6:1 என்ற நேர் செட் கணக்கில், உஸ்பெகிஸ்தானின் செர்ஜி ஷிபிலோவை தோற்கடித்து காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்ற இரண்டாவது சுற்றுப் போட்டிகளில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, விஜயாந்த் மாலிக், ரஞ்சித் விராலி, முருகேசன் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர். இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரஞ்சித் விராலி முருகேசன், ஜீவன் நெடுஞ்செழியன் விஷ்ணு வர்தன், ராம்குமார் ராமநாதன் அருண் பிரகாஷ் ராஜகோபாலான் ஜோடிகள் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறின.

# உலகச் செய்திகள்

## திருடிய ஓவியங்கள் ஒப்படைப்பு



நாஜிக்களால் திருடப்பட்ட மூன்று ஓவியங்களை பிரான்ஸ், உரிய நபர்களிடம் ஒப்படைக்க உள்ளது. பிரான்சின் கிழக்கு பகுதியில் உள்ள டிஜான் நகர அருங்காட்சியகத்தில் நாஜிக்களால் திருடப்பட்ட ஓவியங்கள் உள்ளன. ஜேர்மனிய விநியோகஸ்தகர்களை சார்ந்த இந்த கலைப்படைப்புகளை, கடந்த 1935ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் யூத பொருட்கள் ஏலத்தில் பிரான்ஸ் வாங்கியுள்ளதாக தெரிகிறது.

எனவே இதனை உரிய நபர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரான்ஸ் கலாச்சார அமைச்சர் ஆவுரிலி பிலெப்பெட்டி தீர்மானித்துள்ளார். இதில் மலை இயற்கை ஓவியம், ஒரு பெண்ணின் சித்திரம் மற்றும் மடோனாவும் குழந்தையும் உள்ளிட்ட மூன்று ஓவியங்கள் அடங்கும். இது தவிர இதுவ ரையிலும் கைப்பற்றப்பட்ட மொத்தம் 70 கலைபொருட்களை, உரிமையாளர்களிடம் பிரான்ஸ் ஒப்படைக்க உள்ளது.

## இளமையை தியாகம் செய்த பெண்மணி



சவுதி அரேபியாவில் கடனை அடைக்க வேண்டும் என்பதற்காக 60 வயது முதிய வரை இளம்பெண் ஒருவர் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள்ளார். சவுதி அரேபியாவை சேர்ந்த பணக்காரர் ஒருவரிடமிருந்து, நபர் ஒருவர் குடும்ப செலவுகளுக்காக கடன் வாங்கியுள்ளார், சிறுக சிறுக வாங்கிய தொகை 3 லட்சம் திர்ஹம்களை கடந்துள்ளது.

நீண்டநாட்கள் ஆகியும் பணத்தை திருப்பி தராததால், குறித்த பணக்காரர் பொலிசிடம் புகார் அளித்துள்ளார். அந்நாட்டின் சட்டப்படி இதுதொடர்பாக நடைபெற்று வரும் வழக்கில் கடனை அடைக்கும் வரை பிரதிவாதியை சிறையில் அடைக்க நேரிடும். எனவே தனது தந்தை சிறையில் பொழுதை கழிப்பதை விரும்பாத மகள் பணக்காரருக்கு போன் செய்து, என் தந்தை மீதான கடனை தள்ளுபடி செய்தால் உங்களை திருமணம் செய்து கொள்கிறேன்.

அந்த பணத்தை எனக்கு தந்து வரதட்சணையாக (அரபு நாட்டு வழக்கப்படி) கணக்கில் வைத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துள்ளார். தொடர்ந்து திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்து வந்துள்ளார், சொன்ன நேரத்திற்கு சரியாக வந்த மாப்பிள்ளை இளம்பெண்ணுடன் தனியாக பேசினார். தனக்கு ஏற்கனவே 3 மனைவிகள் இருப்பதாக கூறிய போது, நான் 4வது மனைவியாக இருந்துவிட்டு போகிறேன், என் தந்தையை விடுவித்தால் மட்டும் போதும் என்று கெஞ்சியுள்ளார். உடனடியாக வழக்கிறுருடன் பேசி முடிவுக்கு வந்த பணக்காரர், தான் வழங்கிய கடனை ரத்து செய்ததுடன், மேலும் 3 லட்சம் திர்ஹம்களை பரிசாக அளித்து விட்டு சென்றுள்ளார்.


## ரஷ்ய இராணுவத்தை உளவு பார்க்கும் அமெரிக்கா



உக்ரேன் நாட்டின் ஒரு பகுதியான கிரிமியா சுயாட்சி பிரதேசத்தை ரஷ்யா ராணுவம் கைப்பற்றி விட்டது. அதை நாட்டுடன் இணைக்கும் திட்டத்திலும் தீவிரமாக இறங்கி வருகிறது. இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கண்டனம் தெரிவிக்கின்றன. இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் உதவியை உக்ரைன் இடைக்கால அரசு கேட்டு வருகிறது. எனவே அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை தற்போது கிரீமியா பகுதியில் குவிக்கப்பட்டுள்ள ரஷ்யா இராணுவத்தின் நடமாட்டம் குறித்து தீவிரமாக கண்காணிக்கிறது.

போலந்து, ருமேனியா வான்வெளியில் மூன்று உளவு விமானங்களை அனுப்பி ரஷ்யா ராணுவத்தை கண்காணித்து வருகிறது. இந்நிலையில் கிரீமியா எல்லைப்பகுதியில் இருக்கும் உக்ரைன் விமானப்படை முகாமிற்கு 10 பேர் கும்பல் நுழைந்து துப்பாக்கியால் சுட்டு மோதலில் ஈடுபட்டனர். தங்களுக்கு 10 ராணுவ வாகனத்தை தரும்படி கேட்டதாக கூறப்படுகிறது. ஆனால் இச்சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

## மலேசிய விமானத்தை தேடும் 10 செயற்கைகோள்கள்



கோலாலம்பூரில் இருந்து பீஜிங் நோக்கி 239 பயணிகளுடன் சென்ற மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் கடந்த 3 நாட்களாக தேடியும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த தேடுதல் பணியில் 10 நாடுகளைச் சேர்ந்த மீட்புக் குழுக்கள் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் 40 கப்பல்கள் மற்றும் 30 விமானங்களும் இதில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்நிலையில், சீனாவின் ஜியான் செயற்கைகோள் கட்டுப்பாட்டு மையம், காணாமல் போன விமானத்தை கண்டுபிடிக்க 10 உயர்திறன் செயற்கைகோள்களை பயன்படுத்த முடிவு செய்துள்ளது.

இதன்மூலம், விபத்து நடந்திருப்பதாக சந்தேகிக்கப்படும் கடற்பகுதியில் செயற்கைக்கோள்களின் வானிலை கண்காணிப்பு மற்றும் தகவல்தொடர்பு கட்டளைகளை பெற்று தேடுதலை துரிதப்படுத்த முடியும்.

## கனேடிய படைகள் நாடு திரும்புகின்றன



ஆப்கானிஸ்தானில் தமது பணிகளை முடித்துகொண்டு கனேடிய பாதுகாப்பு படைகள் நாடு திரும்ப உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஆப்கானிஸ்தானில் தாம் ஆற்றிய பணி மற்றும் கனேடிய இராணுவத்தினர் சிறப்பாக செயற்பட்டதை குறித்து மேயர் ஜெனரல் டீன மில்னர் என்பவர் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

ஆப்கானில் சண்டை வலுவான வேளையில், சுமார் 2,000 படைகள் கனடாவின் உபகரணங்களான டாங்கிகள், ஆட்லறிகள் மற்றும் போர் விமானங்களுடன் இராணுவ பணியில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 13 ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 158 கனேடிய வீரர்கள் தமது உயிரைத் தியாகம் செய்திருக்கின்றார்கள் என்றும், இதில் வீதிகளில் நேர்ந்த குண்டு வெடிப்பினாலேயே அதிகமானவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெகுவிரைவில் தம் வீடுகளுக்கு திரும்பி குடும்ப உறுப்பினர்களை சந்திக்கும் ஆவலில் உள்ளதாக மகிழ்ச்சி பொங்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஆப்கான் இராணுவத்தில் தலிபான்களுடன் போராடுவதற்காக பயிற்சி வழங்க 185,000 க்கும் மேற்பட்ட கனேடியர்கள் இருப்பது மில்னரின் மூலம் தெரியவந்துள்ளது.

## 100 சதவிகித வாக்குகளை பெற்ற ஜனாதிபதி



வடகொரியாவில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்கு பதிவில், 100 சதவிகித வாக்குகளை பெற்று ஜனாதிபதி கிம் ஜோங் உன் வெற்றி பெற்றுள்ளார். வடகொரியாவில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குபதிவுகள் நடந்தது.

இதில் தற்போதைய ஜனாதிபதி கிம் ஜோங் உன் போட்டியிட்ட மவுன்ட் பீக்டு தொகுதியில், 100 சதவிகித வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். அத்தனை வாக்குகளும் ஜனாதிபதிக்கு ஆதரவாக போடப்பட்ட வாக்குகள் ஆகும். இந்த வெற்றியின்மூலம் சக்திவாய்ந்த தேசிய பாதுகாப்புக் குழுவின் தலைவர், ஆயுதப் படைகளின் உயர்தளபதி உள்ளிட்ட பதவிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியையும் அவர் பெறுகின்றார்.

அனைவரும் ஜனாதிபதிக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பது மக்கள் அவருக்கு அளித்துள்ள முழுமையான ஆதரவு மற்றும் ஆழ்ந்த நம்பிக்கையின் வெளிப்பாடு ஆகும்.

அவர்மீது கொண்டுள்ள உயர்மதிப்பை வெளிப்படுத்தும் விதமாக மக்கள் அவருக்கு விசுவாசமாக நின்றுள்ளனர் என்று அந்நாட்டின் அதிகாரபூர்வமான செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிட்டத்தட்ட 700 தொகுதிகளிலும் அரசு சார்பில் அறிவிக்கப்பட்ட வேட்பாளரே களமிறங்கிய நிலையில், தேர்தல் என்பது பெயரளவில் மட்டும்தான் இருந்ததாக கூறப்படுகிறது.

## வெற்றிகரமாக பூமிக்கு திரும்பிய வீரர்கள்



ஆறு மாத கால விண்வெளி பயணத்தை முடித்துக் கொண்டு ரஷ்யா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த விண்வெளி வீரர்கள் நேற்று பூமிக்கு திரும்பியுள்ளனர். விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில், ரஷ்யா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த மூன்று விஞ்ஞானிகள் கடந்த 6 மாதகாலமாக தங்கியிருந்து பணியாற்றி வந்தனர்.

இந்நிலையில் வெற்றிகரமாக பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று பூமிக்கு திரும்பினர்.

கஜகஸ்தானின் தகிஸ்காசன் பகுதியில் பராசூட் பொருத்தப்பட்ட சோயூஸ் விண்வெளி ஓடத்தில் இவர்கள் இறங்கினர். முன்னதாக வானிலை சரியில்லாத காரணத்தால் அவர்கள் தரையிறங்குவது சற்று தள்ளி வைக்கப்பட்டது. இருப்பினும் எவ்வித பிரச்சினையும் இன்றி பத்திரமாக தரையிறங்கினர், தரையிறங்கியவுடன் உடனடியாக அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

1961-ல் யூரி காகரிகன் முதல்முதலாக விண்வெளியில் இருந்து பூமியில் தரையிறங்கியபோது பயன்படுத்தப்பட்ட அதே தொழில்நுட்பம் இப்போது சிறிய மாற்றத்துடன் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்
சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்


## காதலுக்கு சம்மதம் தெரிவித்த நாய்.... நாயை மணமுடித்த பெண்



பிரிட்டனில் செல்லமாக வளர்த்து வந்த நாயை, பெண் ஒருவர் திருமணம் செய்து கொண்டுள்ளார். இங்கிலாந்தை சேர்ந்த அமண்டா ரோட்ஜர்ஸ் என்ற 47 வயது பெண் தான் செல்லப்பிராணியாய் வளர்க்கும் ஷீபா என்ற நாயை மணந்துள்ளார். 20 ஆண்டுகளுக்கு முன் திருமணமான இவர், பல பிரச்சினைகளால் சில மாதங்களிலேயே தனது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றார்.

இந்நிலையில் தனிமையில் வாழ்ந்து வந்த அமாண்டா, தற்போது தான் வளர்க்கும் நாய் ஷீபாவையே திருமணம் செய்துள்ளார், இது குறித்து கூறுகையில்,என் காதலை ஷீபாவிடம் முட்டிப்போட்டு கூறிய போது தான் வாலாட்டி சம்மதம் தெரிவித்தது என்றும், துயரத்தில் இருக்கையில் சிரிக்க வைத்து 'ஆறுதல் கூறி ஒரு கணவருக்கு இருக்க வேண்டிய குணத்தை கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மேலும் இந்த திருமணம் சட்டப்படி செல்லாது என்றாலும் தனக்கு ஷீபா தான் முக்கியம் என அமாண்டா தரப்பில் கூறப்பட்டுள்ளது.

## சிவப்பு நிறத்தில் காய்த்த கத்தரிக்காய்



ஹட்டன், டிக்கோயா, இன்வெறி தோட்டத்தில் வசிக்கும் ஞானராஜ் என்பவரின் வீட்டுத்தோட்டத்தில் வளர்ந்துள்ள கத்தரிச் செடியில் இரண்டு சிவப்பு நிற கத்தரிக்காய்கள் காய்த்துள்ளன. இது தொடர்பில் அவர் விபரிக்கையில் இக்கத்தரிகாய்களின் நிறம் வழமைக்கு மாறாக காணப்படுவதால் உணவுக்கு பயன்படுத்தாது இதை மத்திய மாகாண விவசாய திணைக்களத்திற்கு பகுப்பாய்விற்காக கையளித்துள்ளதாக தெரிவித்தார். இப்பகுதியில் முதன் முறையாக இப்படி வித்தியாசமான நிறத்தில் கத்தரிக்காய் காய்த்துள்ளதை இப்பகுதியிலுள்ள பலரும் வந்து பார்த்துச் செல்கின்றனர்.

## வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி




வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் 08.03.2014 அன்று இல்ல மெய் வல்லுனர் திறனாய்வுப் போட்டி பாடசாலை அதிபர் திரு ச.அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், செல்வி. கந்தையா (பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர் வவுனியா தெற்கு) திரு. எம்.பி நடராஜா, (DEO வவுனியா), திருமதி சுகந்தி கிசோர் (பிரதேச செயலாளர், வுவனியா தெற்கு), திருமதி. எம். தேவசேனா (ISA ஆரம்பப்பிரிவு), திரு எஸ். விஜயகாந்தன் (ISA ஆரம்பப்பிரிவு) ஆகியோர் கலந்து சிறப்பித்ததை படத்தில் காணலாம்.

**கடந்த 08,09ஆம் திகதிகளில் ஆசிய பவுண்டேசன் அமைப்பால் வவுனியா நெல்லி ஸ்ரார் ஹோட்டலில் இரண்டு நாள் பயிற்சிப்பாசறை இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு அமைப்பாளர் உமேஸ் மற்றும் அதன் ஆலோசகர் குலதிலகராஜா, வளவாளர்கள், திருநாவுக்கரசு, ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.**




## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவப் பங்குனி உத்தரப் பொங்கல் விழா - 20124



**10.03.2014 திங்கட்கிழமை பிரம்பு எடுக்கும் வைபவத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து ஏழு நாட்களும் நாகதம்பிரானுக்கு பால் அமுது ஊட்டல் பூஜை வழிபாடுகள் என்பன சிறப்பாக நடைபெற்று 17.03.2014 திங்கட்கிழமை பங்குனி உத்தர நாளில் எம்பெருமானுக்கு பகல் இரவாக பொங்கல் விழா நடைபெறவுள்ளது.**













இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 16.03.2014 அன்று வெளியிடப்பட்டது.